O-,85MAK,M
M87
115592

TDRe no 2727
RR no 21-3-1887

(C)

894.811
2727
21/3.87

உ

சிவமயம்.

# மார்க்கண்டேயர்
# சங்கீதசாரவொயிற்கும்மி.

---

இஃது

கீரம்பூர். இராஜலிங்கமுதலியார்

குமாரராகிய

**அப்பாவுமுதலியாரால் இயற்றியது.**

இஃதை

பலருங்கற்றுணரும்பொருட்டு

ஆர். ம-ா-ா-ஸ்ரீ

இலட்சுமணாசாரியார் குமாரர்

**இராமசாமி ஆசாரியாரவர்கள்**

பெருதவியினால்

—:o:—

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1887ஆ


---

விலை அணா - 4.

O-,85HMK,M
H27

155912





உ

சிவமயம்.

# மார்க்கண்டேயர்
# சங்கீதசார வொயிற்கும்மி.

## விநாயகர் துதி.

வெண்பா.

மன்னுந்திருக்கடையூர் வாமமுர்தலிங்கேசர்
பொன்னம்பதமலரைப் பூசித்துப் - பன்னு
முனிமார்க்கண்டன்சரிதக்கு முன்பாயெனுள்ளங்
கனிவாமதக்களிறு காப்பு.

விருத்தம்.

சீர்விளங்குந்திருக்கடையூரமுர்தலிங்கர்
சிற்றடிக்கன்பாமடியார்த்திறமார்க்கண்டன்
பேர்விளங்குநாடகமாய்ச்செய்தார்முன்னோர்
பெரும்பொருளெலாஞ்சுருக்கிப்பிரபலமாகப்
பார்விளங்குஞ்செந்தமிட்கும்மிப்பாவென்னப்
பாடினேனன்பினரும்பாவலோரும்
ஏர்விளங்கும்பெரியோருமெழியேன்சொன்ன
வின்சொல்லையன்சொலெனவியல்கொள்வாரே.

ஆசிரியவிருத்தம்.

மாமருவுசப்தபுரிதன்னின்வளர்செல்வனிறை
மாண்புளோர்மெச்சுமுஜிதன்
மன்னுதமிழ்வாணருக்குபகாரிவிஸ்வகுல
மாபினுக்கொருநாயகம்
பூமருவுமக்கடஞ்சிந்தைக்கிசைந்தபடி
பொன்பூத்திடுங்கற்பகம்

புகலுமெஞ்ஞானநூலாய்ந்திடும்விவேகநற்
புனிதன்லட்சுமணனீன்றருள்
தேமருவுமலர்மார்பனிராமசாமிக்குரிசி
திரவியசகாயஞ்செயச்
சித்தம்வைத்துக்கிரையம்பதியின்மேவுகலை
திகழப்புநாவலன்சி
நாமருவுபாரதியுரைத்தகும்மித்தமிழின்
ஞனிலமெலாம்பரவவே
நன்மைபெறுசென்னையச்சிட்டளித்தானென்றும்
நற்புகழ்படைத்தானரோ.

---

## நூல்.

மாதவயோகிமெஞ்ஞானசிகாமணி மார்க்கண்டன்மேற்கும்மிப்பாட்டுரைக்க, மதவெங்கயமுகவிகசித மதிகங்கையுமணிகுவாருள் வருமைங்கரனிருசரண்முடி சேர்ப்பாமே (செஞ்சொன்) மதுரம்பெறவவர்திருவருள் காப்பாமே. (௧)

வேதத்தினுட்பொருளாஞ்சகதீசனை மேவுமார்க்கண்டன்கும்மித்தமிழ்க்கு, விந்தைப்பணிகிரியுறைசிவ னந்தப்பாகுருகுகனென்றில் தந்திக்கிளையவனிருகழல் போற்றியே. (எந்தன்) சிந்தைக்கினிதாகநறுமலர் சாற்றியே. (௨)

மெய்யன்பினூற்சிவபூசைபுரிந்திடும் வித்தகன்மார்க்கண்டனற்றமிழை, விரிபாருளசர்ச்சனர்தமி[illegible]றிவோர்புகழுற்றிடவினிதுரைபாவினமொப்பணிநிறை பூட்டியே (என்று) வுறைபாரதிசொற்பொருளருளூட்டியே. (௩)

வையம்புகழ்கீரைமானசர்தன்னின் மதித்தசெங்குந்தர்குலத்துதித்து, வந்திங்கிதசாரஹணபவ கந்தன்றனதிருசரணமு வந்தன்புடனகநிறைகொடு தேக்கியே (முற்பவ) பந்தங்களினிருளறவருடாக்கியே. (௪)

பங்கமறுமிராஜலிங்கன்றவத்துற் பவித்திரபுத்திரனப்பாவெனும்யான், பாடுந்தமிழின்மதுரிதகவி நீடுந்திரையதிர்கடல்புவி சூடுந்தகு[illegible]ர்கலைவ[illegible]ர் காணவே (இன்பந்) தேறும்நவரசமுதிர்சுவை பூணவே. (௫)

சங்கீதசாரவொயிற்கும்மியென்னவித்தாரணியோர்புகழ்கொண்டாடத், தமிழ்சொற்றனனறிவினர்செவி யமிழ்துற்றெனவினிதுகுசிறு மழலைச்சொலிதெனவருளொடு காக்கவே (புன்சொற்) பிழையுற்றிடினினிதுணைகொடு சேர்க்கவே. (௬)



பாரிலிருள்கெடவீறும்பிரகாசப் பரிதிமுன்மின்மினியென்னவுமே, பலகற்றுணர்கலைவலருளமலிவுற்றருளிலகிசையினள் சொலுமித்தமிழெழுதுறுசிறு பான்மையே (னின்சொன்) னலமெய்த்ததிசயமுறலதி மேன்மையே. (௭)

கூறுமியலிசைநாடகமுத்தமிழ் கோட்பலவாய்ந்துரைப்போர்க்கதிபன், கூனற்பிறையொளிர்சடையனை ஞானத்தவமுனிபுகல்வனு மேனற்றுணையெனவரிய மாற்றினேன் (புகழினை) யானுற்றொயிலிசையெனுமுறை சாற்றினேன். (௮)

தாரணியிற்சர்வஜீவன்மன்னுத்பவ சத்தியநகரந்தனிப்புரக்குஞ், சக்கரனருள்வருபிரமன்ம டக்கொடியெனுமிசையினளொடு திக்கறிமுரசொலிர வேகொலு வாயினர் (அங்குள) பக்குவமறைமுனிவலர்பலர் மேயினர். (௯)

சீரணியைந்தருணீழலிலேறன்றவ சித்திபெறும்விஸ்வாமித்திரனும், சிட்டருமனுநெறிவியாசரு மட்டறுமுயர்தவநாதவ சிஷ்டருமவரவர்திறமொடு தோன்றினர் (நாரதர்) தொட்டிடுசுருதியாழொடுமருகிண்டினர். (௧௦)

மற்றும்நவநாதசித்தருஞ்சப்தமஹாரிஷிகின்னரர்கிம்புருடர், மஹிமைத்திடவைதிசாறமிருதித்தியர்சுகர்முதிதவர் நகுமுத்தணியிறையுறைவிட மாய்ந்தனர் ([illegible]வரவ) ரகமெய்த்திடவினிதிருமெனவாய்ந்தனர். (௧௧)

நற்றவமாமிருகண்டர்மருத்வதி நன்முகம்பார்த்தவரோதுரைப்பார், நளினத்திருவொயிலனநடை யெழினத்துறுமயிலியல்புடையழிமொய்த்தலர்குழலினியருகாகவே (வாராய்) தெளிவுற்றுரைகொடுவிதியவை போகவே. (௧௨)

என்றுமுனிவருரைத்துமருண்டமான் கன்றின்விழிமூலைசெண்டனையா, யென்மனதுருகிடுரதியன நன்மதிமுகவனிதையேயினி துன்மனைவருபிரவலர்பசி யாரவே (யமு) துண்மெனவுபசரியெனமுனி கூறவே. (௧௩)

நன்றென்றுளமகிழ்கொண்டுமருத்வதி நங்கையரும்பர்ன்னசாலைபுக்காள், நலமாய்முனிவருமடியவர் குலமோடிறையவனைவைசெலவுளமீரியகனியொடுவழி யேகியே (சென்றங்) கு[illegible]சேவையெனினிதனைகடன் மூழ்கியே. (௧௪)

கட்டளையாய்பிரம்மனிட்டிடுமாசனத் தட்டவசுக்கண்மற்றோரன்மந்தார், கதிர்விடுமணிமயவுசிதம துதிர்தொடையலருமறைகுழலியர் மிருதுதாளகவபிநயநட மாடவே (தகதிக்) கிடர்தஜெணுகிடவெனுமுழவொடு பாடவே. (௧௫)

வட்டமுலைமடமாதரிருபுறந்தொட்டகவரியுமாயொளிர, மதி
வரவலர்குமுதம்தென விதியருளினிலிமையவர்கன முதிதவவிரதி
யரகமகிழ் பெற்றிடவே (பாணர்) துதிசொலியயனவையெதிர்புக
முற்றிடவே. (௧௬)

சிந்தைமகிழ்ந்தயனிந்திரன்வானவ ருந்தவராகநிறைந்திருந்
தோர், திடமொடுசடைமுடியொளிர்தர விடையினின்மரவுரிதுவ
ழ்கர மடர்ஜெபவடமிசைவுறவுள மெய்த்தனரே (வசிஷ்ட்) டரு
ம்விரைவுடனொருமொழிபுக லுற்றனரே. (௧௭)

அந்தமதாகநிறைந்தகொலுவினி லிந்திரசேவியாசதந்திரரே,
அருமறைதெரிகிலொனவிவ னுறைதருமவையுளர்பலரினு மறநெ
றியுணரொருகலைபுகல் கில்லீரே (லுண்மைத்)திறனவ வானருளுறு
முனி வல்லீரே. (௧௮)

மன்னுமயன்பேரவைக்கழகன்றென வாய்மைவசிஷ்டருரைத்
திடவும், மதமொடுமுடல்பதறிட விரு மதர்விழியனல்சிதறிடநிறை
மதிகெடமொழியதிர்வொடுசின மீன்றூர் (பூமன்) பதிதவமுனிவ
ருமெதிரொதிர் கூறினர். (௧௯)

என்னசொன்னாயவைமுன்னபியானு மிருப்பதறிந்திலையோ
வசிஷ்டா, வென்போலொருவருமிலையென வின்பாரவையுளர்மு
னமுன மென்றீறமுமறிவொடுமுறை பேசினாய் (மறைவள) மூங்
கோரணையும்பலமுறை விசினாய். (௨௦)

வீசுவதென்னடாகோசிகனே கபடமித்திரனே கலகத்திறனே,
வீணேமுனிதலினிறைபுகழ் காலேமடமையினிகழுனை பூணு
ரொருவருமுனைமதி யாரடா (சும்மா) தோணுதுளமனுமுறைவிதி
பாரடா. (௨௧)

பேசுங்கலைக்கியானபாசுரமுக்கிய விசேஷவிலக்ஷணன் நீதா
னோ, பெருமையுமருமையுமிவனுறை தருமிறைமுனமழிகுவை
நரை யுறதிரைபடுமுதியனே துள்ளாதடா (வேசி) பெறவருமொ
ருபுதல்வனே விள்ளாதடா. (௨௨)

கத்திக்கத்திச்சும்மாதத்திவிழுகிறாய் பித்தனைப்போல்விஸ்வா
மித்திரனே, கருதிடுபவனூன்முறையுள விரதமுமுசிதமுமறிவை
யோ க[illegible]கள்சினவெறியனேகெடு வாயடா (மேலோர்) பொறை
புணர்கிலரு[illegible]யடை வாயடா. (௨௩)

மெத்தத்துள்ளாதேவசிஷ்டாவுன்றந்தம் விழவடிப்பேனகல
ப்போடா, வென்றெழுகோசிகமுனிவனை மன்றுளவாசவனிருமி
கு டின்றுளமீரியகடுசின மாற்றினன் (உங்கட்) கென்றுளவிதனு
பவமெனத் தேற்றினன். (௨௪)



தேற்றும்வலாரியைப்பார்த்தயனிவ்விவர்க் கேற்றவுபாயமொ
டுத்துரைத்தீர், சேனுளபலாதிசயமுற யானசமகிழ்வுறவிவர்
கை தானறவொருவழிமுறைசெய்தீ ரென்றான் (வச்சிர) பாணி
மயனெதிரொருமொழிகிர் கின்றான். (௨௫)

நாற்றிசையும்புகழ்ந்தேற்றுந்திசைமுக நாதனேகேளுமிப்
போதிவரால், நாழிகைசென்றனவவரவர் மாளிகைசென்றிடுமுன
முறை கோளுகளுண்டெனி லுரைசெயவினு மென்றார் (வியாச)
ராலுளசங்கதியறியவேதோனு மென்றார். (௨௬)

அம்மொழிகேட்டயனுண்மையிலேவேத வியாசனைநோக்கியு
ரைக்கலுற்றார், அகிலத்தாரும்நாரிருபுகண் மகவைப்பெறுகிலொ
ளினவர் தருணத்துறுகதியுயர்பதி யாசரோ (சொல்லு) மிகுதத்து
வவளமறைபுகல் வியாசரே. (௨௭)

இம்மையிற்பிள்ளையில்லாதவர்க்குச்சுவர்க்க மில்லையென்றே
மறைவிள்ளுதகா, னிதுநிச்சயமெனவுரைசெயப் பதுமத்தயன்
முதன்முனிவர்க ளிதமுற்றனர் திதவமிருகண்டருமே (வியாசரே)
சுதனற்றவர்செயில்வகையெது விண்டிடுமே. (௨௮)

என்றுரைமாமிருகண்டரைநோக்கியவ் வண்டர்பிரானையுட்
கொண்டடவிக், கேகியேசதிதியிருவரு மாகியேசெபவிதியொரு
மன தாகியேதவமதுபுரிகுவதுற்றிடுவார் (சிவனரு) ளாகியேபுத
ல்வனைமகிழ்வொடு பெற்றிடுவார். (௨௯)

நன்றெனவேதவியாசருரைத்திட வின்றதிகாலங்கள்சென்ற
னவா, னலமுற்றிடுமவரவர்மனை செலவுத்திரவவையுளொன நிலை
பெற்றயனுரைகொடுபல ரேகினர் (இந்திர) னளினத்தமர்பதியு
றைகுவ தாகினர். (௩௦)

வல்லமுனிமிருகண்டரவையினின் மெள்ளவெழுந்தங்குமுள்
ளுடைந்து, மதிவியாசரினுரையிருசெவி கொதியூசியெனுறவென
தரும் விதியோசிவவெனமுனிவருமுன் னடந்தார் (தெய்வ) கதி
யாமெனவடியவரவர்பின் னடந்தார். (௩௧)

செல்லவென்றானடைகொள்ளுதில்லைமைந்த னில்லதினாற்சு
வர்க்கமில்லையென்றார், தேவாசங்கரமறைமுத லாவாயங்கதிர்மதி
நதி மேவார்செஞ்சடையொளிர்தர வீராயோ (உ[illegible]யீரு)
பாகாவெங்குறையறவரு டாராயோ. (௩௨)

வேதனுமான்முதலோதறியாமறை வித்தகாவென்றுளங்கை
த்தவராய், மென்றளிர்மருவனமலர்சொரி கின்றொளிர்தருவினம
லிவுறு தென்றலுமயர்வுறமதுகர மார்த்தன (சோலையி) னின்றுள
மகிழ்வுறமுனிவரர் பார்த்தனர். (௩௩)

போதவேகன்னிழலாதரமாங்கனி சாதனையானநீராதலினுற், பொற்புடனயர்வுகடெளிதர விப்பெருவனமதினெழில்பெறு மற்றதருவினிலிருமிரு மன்பர்களே (இங்குள) பற்பலகனிபருகுமினதி நண்பர்களே. (௧௪)

சற்றிங்கிருந்துசெல்வோமெனச்சீடருமெய்த்தருனிவருமொத்திருந்தார், சம்பிரமவிங்கிதமொழியினை ஞம்பரினம்பதியிறையவை நம்பியேசென்றிடுமுனிவருமார்க்க முற்றுள் (வெகு) தெம்புடனம்புவிழிகள்கொடுபார்க்க லுற்றுள்.  (௧௫)

உற்றபொழுதந்தரத்தில்வசித்துள சுந்தரிவிசடம்பத்தினிமா, ருங்கச்சிளவனமுலைமெளிர் தங்கச்சிமிமிளிதிதம்பவளங்குச்சுறுகுழன்முகமதி தோற்குமே (மாமடு) ரஞ்சொற்சுவைதுவழ் கொடியிடை யெற்குமே. (௧௬)

கோலவிசித்திரவிடைக்கழகாகவே சேலையுடுத்தியேமேலணியுங், கொத்துச்சரமுத்துப்பவளத்திற்பொலிவுற்றுத்திகள் சித்திரப்பதுமைக்கொப்பிடுமெய் துலங்க (மதர்வடி) வத்திரத்தொடுமற்சட்படுமை யிலங்க. (௧௭)

காலிற்சதங்கைகலீர்கலீரென்னிடக் கைக்கடகங்கள்பளபளெனக், கஞ்சத்தொளிர்வதனினியெனி மஞ்சுற்றிடுகுழலியர்வன முஞ்சுத்தியேவிரைவொடுமலர் கொய்திடுவார் (தங்கள்) பஞ்சொத்திடுமடியயர்வுற வெய்திடுவார். (௧௮)

பைங்கிளியேயதோவங்குளசோலையிற் றங்கியேகூவுதிளங்குயிலும், பாருங்களிகூருஞ்சல மாருந்தடமேரும்பல பட்சிகளுமதில் வாசமடி (இதோ) வெட்சிமலர்மணம் வீசுதடி. (௧௯)

மங்கையேயாமிதோபங்கயமொக்குகள் கொங்கையைப்போன்றுவிளங்குதடி, மானுங்கலைதானுஞ்சிகி யானும்பெடைதோனும்படி வாவிக்கடுத்திடச் சாருதுபார் (மந்திகள்) தாவிக்குதித்தினிப் பாருதுபார். (௨0)

கன்னன்மொழிமடமின்னிடைநன்னுத லன்னமொப்பமலரின்னுதடி, கதிர்த்தணடர்சரோசமுரு குதிர்த்துனுவமராகவுரியதிர்த்தினுல்பராகமொளிர் மேன்மையும்பார் (ஒன்றென) றெதிர்த்திடவுமுராய்ந்துறு மாண்மையும்பார். (௨௧)

என்னேயிவ்வானரப்பெண்ணிடைதன்னிலோர் சின்னக்குரங்கதுபின்னிடவே, ஏறுதுசேருதுகேருதுமீருது சீறுதுபாரதினிளமுலைபருகுது வருகுது கண்டிடுவீர் (காய்கனி) கிளையொடுசரிகுது நிரைகதிரொண்டொடியீர். (௨௨)



மெத்தெனும்பஞ்சரத்துற்றிடுங்கிள்ளைகள் சுற்றமுங்கூடிக்குலவுதுபார், மெய்த்தவவேடங்கொண்டவர் கைத்தலநீடுங்குண்டிகை மிக்கிறைக்கவெனச் சுனைநீர் (மொண்டு) கைக்களிறுக்கள்கனைத் தனபார். (௨௩)

முத்தொளிருங்கமலத்தின்மெல்லூசலிற் றத்தம்பெடையுடனெஞ்தனங்கள், மோகக்கலவியினீடுற வாருற்றளியிசைபாடிடமுன்னிலைநீர்த்தடந் தோற்றுதுபார் (அதின்) வன்னப்படித்துறையேற்றதுபார். (௨௪)

வாருங்கடியொன்றாய்ச்சேருங்கடி யுளந்தேருங்களிவ்வழிபாருங்கடி, வன்னக்கின்னச்சொன்னக் கிண்ணத்தென்னத்துன்னவ்வரைத்தனத்தினைச்சுமக்காமருங்கே (துவழுற) வரைக்கணத்தினிற்கடப்போமொருங்கே. (௨௫)

தேரியஞானச்சதிராளந்தனைச் சாருவோமென்றேயன்னேரிழைமார், தேடியோடிமருமலர்குழல் சூடியாடியரிஹரர்புகழ் பாடிநாடிவிரைவுடனடை முக்திபோ (மெய்யுற) வாடிநீடியிருடிகன்சதி வந்தனரோ. (௨௬)

வந்திடுமாதரைக்கண்டுமருக்வதி சிந்தைமகிழ்ந்தன்புகொண்டிவராரா, மலர்மகளோவொளிவளைகா வலர்மகளோவலதெழில்சேர் கலைமகளோவுளதுவைசெயும் நங்கையரோ (கொம்மை) முலைதிகழாயிழைவரிசையின் மங்கையரோ. (௨௭)

சிந்தைதெளிந்திடவந்தவயன் மறைந்திடுவீரதிசுந்தரியீர், செம்பொற்பதமதுசரணென வம்பொற்பதுமையினிலகிய கொம்புற்றவடனையெழும்வகை தூக்கியே (மாதர்க) ளன்புற்றமுதொளிர்மதிமுகம் நோக்கியே. (௨௮)

கேளடிஞானச்சதிராளேநாங்கள் வாழுவதும்பர்பதியாகுந், திருவைக்ரடலெனவருளுறு பெருமைத்தவமுயரொழுவரினறமொழுதமையிரெழுகுவதி யாங்களே (அவரது) பரிவிற்கினிதுறுமனவிதுறைங்களே. (௨௯)

நீரும்வனத்துளபன்மலர்கொய்யவிச் சோலையைநாடியேவந்திடுதில், நேரிழையுனதிடம்வருகென மீரியவிழைவினுமொருமொழி கூறியேவருகுவமெனவிவண் வந்தனமே (செழுமின்) னேரியசிறையொளிர்பெடைநடை முந்தனமே. (௩0)

இந்தநற்கானிடைச்சந்தனச்சோலையிற் கந்துகமாடுவோம்வந்திடுவீ, ரென்னவுமாஞத்திலகுகணன்னயமாதர்க்குழுவினிலுன்னியஞானச்சதிரவளார்த் தெழுந்தாள் (மற்றக்) கன்னியரரிச்சையிறொடுபார்த் திசைந்தார். (௩௧)

பந்தயமாய்மில் னுஞ்சுந்தரியீரிதோ வந்ததுபந்துகவர்ந்திடுங்
கள், பதராதிருமிரும்விரைவுட னதிராய்வரும்வருமரைநொடி சி
தறுதுறமுறுமரிவைய ராங்கிருங்கள் (கந்துக) மெதிரோவிரும்வி
ருமெனுமெழி தாங்குறுங்கள். (௫௨)

தாங்குவேனேவிளமாங்குயிலேயிதோ தூங்குதுவான்பந்து
காண்கிலேயோ, தடத்திடக்கதிர்முலையொடு மெடுத்தடக்கிட்வரு
மொரு மடக்கொடித்துவரிதமுனக் கஞ்சுவேனோ (பந்து) விடுத்
திடத்திறமிலியுனைக் கெஞ்சுவேனோ. (௫௩)

பாங்குடனேங்கியகைவிசையாற்பந்து தாங்கினவிக்குறிபூங்
கொடியே, பளபளபளபளவெனும்வளை கலகலகலகலவெனுமிழை
தளதளதளதளவென வசைந்திடவே (பூந்தரு) பலபலபலபல
வெனமலர் சிந்திடவே. (௫௪)

வேடிக்கையாகவேகூடிக்குலாவிப்பந் தாடப்பட்டோடியகோ
டரங்கள், வெம்பிப்பிரசம்பெற்றலர் கொம்புற்றுடல்பம்பிக்குலை
விட்டிடுந்தாழையி லேறினவே (சாய்பல) பட்டெழிந்தவ்வுழி சிறி
னவே. (௫௫)

நீடுற்றதண்டலைசூழ்வனத்தேயனப் பேடுற்றபெண்களிசென்
டாடியபின், னின்றயர்வுறமுடல்குழைதர மண்டியபசிதவனமு
முற வண்டடர்குழலியினெழின்முகம் நோக்கனுற்றூர் (அமு) து
ண்டிடுமெனவயமிளநகை யார்க்களித்தாள். (௫௬)

அன்பினளித்தசலந்தனைவாங்கிக்கை தென்புடன்சுத்திசெய்
தின்புறவே, யறுசுவைகரிபாயசமினி துருகியநெயுமாதயிரொடு
முருகுதிர்பலகாரமுமன்னம் படைத்தாள் (வானக) விருடிகள்சதி
மார்களுமனங் களித்தார். (௫௭)

இன்புளநங்கைமருத்வதியாளே தினன்புளகாதலரொங்குசெ
ன்றூர், இந்துமுகத்தொளிர்முலைபரு குந்துவரொத்திலகிதழ்கம
லந்திகளத்தமுமழலைமொழிக்கி யன்றே (கொஞ்சிடு) மைந்தனை
யிக்கணமருகினழைக்க வென்றூர். (௫௮)

உண்படியாகவழைத்திடுமாதரைப் பண்புடனேக்கி[illegible]
ண்கொடியா, ளேனேடுயிராகியபதி வானோரவையேகினர்[illegible]
னே[illegible]னேரிலையுண்மை சொன்னேன் (மனங்) கோணுமலே
மாறுராமுதுண்மினென. (௫௯)

பண்படுசொல்லியர்சிக்கென்றெழுந்து பழிக்கொருவித்தென
ப்பாரில்வந்த, பாவியுன்னகந்தனிலினி மேவியன்னமுண்டிடவினி
யாவதென்னதந்திடுவிடை சென்றிடுவோ (மென்றுளிர்) பாவை
யன்னபைந்தொடியர் புகன்றிடவே. (௬௦)



காதளவாகவிசைத்துவிடுங்களை போதப்பட்டொல்கியமான
துபோற், கந்தந்தங்குங்கவினர விந்தம்பங்கம்படவொளி சிந்துங்
தண்ணந்தன்முகம்வாடியே மெலிவா (யருவி) சொரிந்துங்கண்ண
ங்கந்தன்னாடியே சொலுவாள். (௬௧)

ஓதறியேனேயென்மீதுவினமேது உண்ணுதுசெல்வோமெனு
ங்கோதையரோ, சிவனருளினுவோமுன்செய் பவவினையதுவோமி
ஞ்ஞாங் தவமதுகுறையோவென்செயுவே னம்மா (நான்கெஞ்) சவு
மனமிலையோவுண்பதி லீனமா. (௬௨)

மீரியசர்க்கரைமுக்கனியப்பம்புளியோரையுடன்பரிமாறிருக்க,
மிஞ்சியகுலவஞ்சியர்சல மிஞ்சவுமுளவஞ்சகமிது மேன்மையோ
விங்ஙெவர் போதனையோ (பழுதற) நோன்மையோசங்கார் சோ
தனையோ. (௬௩)

வாருமமுதுன்னுவீரொன்றழைக்குமக் காரிகையாளகந்தெரி
டவே, வங்கணமுளமங்கையேயினி யுண்கவுமிதுபங்கமேவருமை
ந்தனில்லாவகந்தன்னி னண்ணேம் (நாங்கள்) சொந்தமதாகவந்
தன்ன முண்ணேம். (௬௪)

என்றவர்சொல்லியேசென்றதுகண்டொற்கண்டின்மொழியின
ளின்றயர்வா, லெங்கிங்களைதாங்கியேகுர லோங்குற்றழவீங்கியமு
லை தேங்கக்கணிணிங்கியவருவிகள் பொழிதரவே (பரிவுட) னங்கு
ற்றிடுபாங்கியரறைவர்க டெளிவுறவே. (௬௫)

கொன்றைமதியணிவேணியனூர்செயலென்றவர்தேற்றவுமன்
றலந்தார்க், கொண்டைக்குச்சுந்துவர்மணி கண்டத்துற்றம்புரி
சர மண்டக்கச்சும்பெறமுலைமீதுற் றசையக் (காலிற்) றண்டைக்
கொத்தும்பரிபுரமோதுற் றிசைய. (௬௬)

முத்தெனுமாலைச்சற்றேநகைத்திளந் தத்தையைப்போன்
மொழிகற்றவளாய், மோகனசெகமோகினியென வாகனநடை
யாகவேவளை முன்னங்கைவீச்சும் பயிலாகப் (பற்பல) சன்னைகள்
பேச்சுமொழியிலாக. (௬௭)

சற்றேகடைக்கண்சுழட்டியேமாதவர் சித்தமுருக்குங்கலைச்ச
மர்த்தி, தத்தெய்தாகிடதஜெம்தரி கித்தெய்தெய்தகுணந்தரி குகு
தரிகுகுகிடர்தாகிடர்தெய்த்தாமின்னு (திமிகிட) தகதித்தீந்தங்
கணத்தோமென. (௬௮)

வந்தனள்சுந்தரிதந்திரமுந்தெரி மாமதுரைக்குறவஞ்சிநல்லா
ள், வாசலின்வளமேசொலியருகேசெலமிகவாசையினொடு மாது
மருத்வதியாளே நன்று (மெய்கள்) சாதிவளத்தையுங்கேளுமென்
றூள். (௬௯)

விந்தையதானகுறக்குலமேன்மையைக் கந்தரெப்போதுமறி
ந்திருப்பார், விரிகானுறுமானினமுயல் கரிதேனுறுபூனையினுடல்
பரிவாயுனுமோனமுமுள நீயடி (உள்ள) துரையோமயிமானமு
முள சாதியடி. (எ0)

நாட்டுக்குறவர்போற்கந்தமுண்ணும்வண்டு நக்கினபூவெச்
சிலென்றணியோம், நாடித்தலமோடிக்குறம் பாடிப்பணந்தேடிற்
றிட நல்லகுறிசொலி வந்தமடி (கான) வள்ளிமுருகனொஞ்சொந்
தமடி. (எக)

பூட்டகமாகக்கொழுந்தனைமாமனைக் கூட்டியணைத்துப்படுத்
திடுவோம், பூரித்திடுமாரைதொட் டாரைப்பழுதோரோமெம்
புரிமணிதொடவருமடியம்மா கலகம் (எங்கள்) பெருமையுமறிகு
றிகளுமறியா துலகம். (எஉ)

எண்ணியவெண்ணந்தனையறிந்து குறி யின்னமதாகவுரைத்
திடுவோ,மெனவுரைசெயவினிதுறுகய குணமணிமயகனதனமுய
ரேந்திழையுள்ளங்குறித்த செய்தி(மனதி) லோர்ந்துநீசொல்லென்
றுரைத்திடவும். (எந)

அன்னைமருத்வதியாண்முகம்நோக்கியத் தென்னவனுட்டுக்
குறத்தியரும், அறிவொடுதெய்வந்தொழுதருள் பெருகிடுசெல்வந்
தழைதரு குருபலனெய்துங்கரமது காட்டிடிரம்மே (சொல்வே)
னிறையுளமெய்துங்கனிவொடு கேட்டிடிரம்மே. (எச)

வானவரம்பதிபோனமுனிவரக் காணமென்றெண்ணினைதா
னவரும், வருவாரரைநொடியினிலிதோ பரிவாயடிமையர்குலமுட
னறிவாமடமயிலியல்புள சுந்தரியே (நன்மை) பெறுவரொனது
ரைகுறிதிற முந்தெரியே. (எரு)

மானேகனிந்தசெந்தேனேதுயர்படு வானேயினியிறையோ
னருளால், மாரன்றனைநேருந்தவ மேருங்கலைதேரும்புவி யாருங்க
ளிகூருஞ்சுதனைப் பெற்றிடுவீர் (நிறைதரு) சீருங்கதிசேரும்பதியிற்
புக்கிடுவீர். (எசா)

தப்பிதமில்லையென்சொற்படிவாழ்வுக ளிப்புடனெய்திடுமோ
ப்படிதான், தங்கமேயெனதங்கையினுள செங்கனியெனுமங்கை
யேயென வங்கணமுளசிங்கனுமென்னைத் தேடுறுவா (னென்
செல) விங்கிதகுணவங்கதிரன்னப் பேடுறுவாள். (எஎ)

ஒப்பிதமாமோவெனக்கிதுவேதன் விதிப்படியாகுமெனக்கரு
தி, ஒல்லைப்பெருவினையினைநொந் துள்ளத்தயர்வுறமுனிவன் றெ
ள்ளுற்றிடுமதுமலர்வனம் நீங்கியே (மறை) விள்ளுற்றிடுமடியவ
ரொடுமோங்கியே. (எஅ)



மங்கையிருக்குமனைக்கெதிராய்வரு மிங்கிதமாமிருகண்டர்மு
ன்னே, வாடியேமுகமொளிகெடமலர் சூடியகுழல்கலைபடவிழி
யோடியபுனல்பெருகிடவடியிற் பணிந்தாள் (முனிவர்) பீடுறுமன
முருகிடவிதுசொற் றுணிந்தார். (எசா)

பங்கயமென்முகநங்கையுனக்குறு பங்கமெனென்குறையிங்
கெவரார், பாவித்தமுதுண்டிடவரு மாவித்தகரொண்டொடியென
தாவிக்குடலென்றுளிர்வனமெல்லி நல்லாய் (இல்லின்) மேவுற்
றெவர்சென்றனர்வனவல்லி சொல்லாய். (அ0)

மெத்தவுனக்கிவ்வருத்தமென்னென்ன மருத்வதிமாதுமுரை
த்திடுவாள், வேதமோதுமாதவா யெனுதிதிலாதநீத வித்தகாநீர
வைக்குற்ற பின்னே (சில) பத்தினிமார்நம்மகத்தின் முன்னே. ()

புத்தலர்கொய்துவந்தாரைப்பரிந்தழைத் துத்தமயீருளதெத்
தலமோ, புகல்வீரெனவும்பரினணி நகராமெனவின்புடன்மன ம
கிண் மீரியப்பண்பினர்தம்மைக் குறித்தே (யடிமைய) ளகம்வாருமெ
ன்றன்புடனமஸ்க் கரித்தே. (அஉ)

பாரினடந்தலுத்துற்றகளைதெளிந் தாரும்படிக்கிவெந்நீருட
னே, பசுமஞ்சளினுறைகலவைக ளிசையும்படிவளைமுலைபுய முசி
தம்பெறவரிவையரினமுங் குளித்தார் (அன்னம்) புசியென்றலர்
தாவவர்மனமுங் களித்தார். (அந)

தேரியவாழைபலாவிரதக்கனி மீரியதேன்பலகாரமுடன், சித்
திரான்னமுந்ததிகிரத சுத்தமான்னமும்பதிவிரத சித்தவானகந்து
திமிருதுதாசுக மடவார்க் (கன்புயர்) பத்தியானுவந்ததிதுரிதமு
டனமுதிடவே. (அச)

கொங்கைகுளிரச்சுவைக்குமமுதைப்பின் றங்கையிற்கொண்
டுணுமிங்கிதச்சேய், கொஞ்சியேயமுதருந்தவிவண் வஞ்சியேய
ழையுமென்றபொழு தஞ்சியேயடிபணிந்துமகவில்லை யென்றேன்
(அடி) வஞ்சகியெனமொழிந்துவழிசெல்ல நின்றார். (அரு)

மங்கையரீருமக்கென்குறைசெய்தன னுங்குகிலீரிதுவென்
கொலென்றேன், மானேயுண்ணேமொருபொழு தேனும்நண்ணே
முலகினி லானமகப்பேறில் லானவரோ (பாவி) யானவரிக்கீட
யானவரோ. (அசா)

ஆமெனச்சொல்லியப்பூமென்குழலியர் தாமகன்றுரேயுண்ணே
மெனமே, ஐயாமுனிநாதாமுன் செய்யும்பவமீதோயினி யுய்யும்
வகையேதோயிவ்வாறென் றறியேன் (நம்மை) வையம்பழியாதே
சொல்வீரென் றுறையே. (அஎ)

தாமமணிப்புயவாமனெனத்திகள் மாமலரோன்கொலுவாம
வையிற், றூன்சொன்னதுமுறைசெயவெனு மான்கண்ணிதனுரை
கொடுமறை யோன்றன்னகமுருகியேநெடு மூச்செரிவான் (பின்
னுந்) தான்பொன்னகருறைதலின்வரு மேச்சறைவான். (அஅ)

வண்ணக்கிளிமொழியாளேயானேகேவ் விண்ணவர்நாட்டுள
புண்ணியரின், மருங்குற்றனனிறையவையினை யொருங்குற்றெவ
ரெவாறமுள ரருங்குற்றமுளவரெவரிதி லாயுமென்றூர் (யானும்)
பெருங்குற்றமுளவனொருசிறு சேயிலென்றே. (அகூ)

கண்ணொளிபோலுமகப்பேறிலாதவர்க் கெண்ணும்பதவியில்
திண்ணமென்றூர், கதிர்மதிநதிவேணியனரு ளதுபெறவனமேவி
யேநிறை மதியொடுமரிதாகியதவமே புரிவோம் (நமக்)கெதிர்வரு
மாறூர்சுதன்வரமே தருவார். (கூ0)

வாரும்பெண்ணேகதிசேரும்படிக்கிவெண் ணீறணிவோன்ற
னைக்கோரிடுவோம், மாயப்பெருவாழ்வினுமொரு சேயற்றவராயி
னநமை யாயுற்றறிவாகியமைந்தன் றந்திடுவார் (ஊழ்வினை) தீயுந்
றெரியாகியவெண்பஞ் சென்றடுவார். (கூக)

காரணமெய்ப்பரிபூரணநாதனைச் சாருவோம்நாமிருபேரென
வே, காவுங்களிறடர்வனமலை மேவும்புனநதியணிகுயில் கூவுங்க
னவளமலியொரு குன்றடர்ந்தார் (தழைதரு) பூவுங்கனியுடனொ
ளிர்தரு வுங்கடந்தார். (கூஉ)

வேதமுனிவனுமாதும்வழிசெலும் போதுமுன்னுதலர்க்கீத
லெனு, வெண்டிரையழையிருகரமென வண்டினர்பவமதுகெடுமி
னி யுண்டிறையருளெனநிறைபுனல் தோற்றினவே (காசி) என்ற
வர்மனமகிழதுகுறை யாற்றினவே. (கூங)

தீதிலதானகங்காநதிபாரடி காதலிநாமுன்செய்பாதகங்கள்,
சிதறிக்கதறும்படிதிரை யதிரும்றெதிருங்கயல்கனி யுதிரப்பதறுந்
தண்ணுளசோலையு மதிலே (கிள்ளைகள்) மதரும்றதிருஞ்சொன்ன
லமோரணி நுதலே. (கூச)

முன்னுட்பகீரதன்றன்னுற்கொணர்ந்தது மின்னதியாமடிபெ
ண்ணரசே, முதுமறைநூலோர்வானவ ரதிதவமேலோரானவர்
மூழ்கிப்பவங்களைத்திடுவார் (என்றும்) வாழ்கத்தவங்களியற்றிடு
வார். (கூரு)

வன்னமதிலுமரகதவுத்திரமுன்னிலையானபொற்கோபுரமும்,
மணிமண்டபமுஞ்சதுர்மறை யினர்சந்ததமுந்துதிசெய வாழும்
விஸ்வேசர்தஞ்சந்நிதியு (மன்பர்கள்) தாழும்விசேடவம்பொன்
னிதியும். (கூசு)



இத்தகையானதலத்தினைப்போலவு மெத்தலமோத்துளபத்தி
னியே இருவருமிதிலொருமனதுட னொருமையின்மகனதுபெறவு
யர் பெருமையினொடுமரனடிமுடி சூடவென்றே (யன்பா) மிவை
யுமறைமுனிவரும்நதி யாடினன்றே. (கூஎ)

சுத்தவெண்ணீறுருத்திராட்சமுங்காவித் துகிலுடன்முப்புரி
நூலணிந்தோர், சோலைக்கருகேயுளவொரு பாலுற்றரிதாகியதவ
மேலுற்றெழவேயிருகரமுங் குவித்தார் (சிவனருள்) பாலித்திட
வேயரகரவென் றுரைத்தார். (கூஅ)

தஞ்சமுனக்கெனவஞ்செழுத்தோதியவ் விஞ்சைமுனிவன்ற
வஞ்செயுனள் சங்கரர்திரிபுரஜெயவரை மங்கையளொருபுறமுற
விரி கங்கையுமதிமுடியொளிர்சடையுட னுடவே (வானோர்) ப
ங்கயன்முதன்முனிவர்களருமறை பாடிடவே. (கூகூ)

கஞ்சமலர்க்கரத்துற்றிடுமான்மழு வுந்திரிசூலகபாலமுடன்,
கரியுரியாடப்பணவர வுறமிசைநீடத்தமியர்க டிருவடிகாட்டப்புனை
தருமாவில் வந்தார் (தொல்லைப்) பெருவினையோடக்கனிவுறசே
வை தந்தார். (க00)

நம்புமடியவர்க்கின்பந்தருஞ்சிவ நாதனைக்கண்டுநன்மாதுட
னே, நற்றவமுனிவருமெய்ப்புள கத்துடனிருசரணைத்தொழு து
ய்த்திடவரகரசிவசிவபோற்றி யென்றே (அன்புயர்) பத்தியினொடு
விரைகமிண்மலர்சாற்றி னின்றூர். (க0க)

எம்பெருமான்மனதன்புடனேதவப் பண்பினையோர்ந்துபின்
னென்புகல்வா, ரோதுக்கிவணிருவருமெனை யோதித்தலமதுபுரித
லி னியாதுற்றினியுரைசெயினஃ தீகுவேனென்றூர் (செம்பொற்)
பாதத்திணைபரவியேசுத னீகுவீரென்றூர். (க0உ)

இச்சையினுலெனையுச்சரிக்குந்தவ மெச்சினேன்காண்முனி
சர்ச்சனனே, இன்னுண்மகனிலையெனவொளிர் மின்னுண்மொழிய
துகொடுவரி னென்னுமுனமெனைநினைநி னீரவ்வினையாலும் (அதி
திக) னுண்ணுமனுமனுதினமடர் வெவ்வினையாலும். (க0ங)

பட்சமதாகப்பெற்றுச்சிதமாய்வள ரச்சிசுபன்னுளிராதுகண்
டீர், பலகலையுணரவுமறிவுள னுலகினிலரிதெனவெழின்மிகு குல
மகன்வயதீரைந்திருமூன்றிற் பெறவோ (கூன்று) டிழிவுறவுட
மாயொருநூறுண்டிற் றாவோ. (க0ச)

கள்ளமில்லாமலேவிள்ளுமெனமுனி வல்லவருமிதுசொல்லு
கின்றூர், கங்காதரவெமதிடர்கெட வுங்கோதறுகுணநிதியெனு மங்
காதறுகலையொடுமறைநா லறிபவனுய் (ஓர்சுத) னெங்காதலிபெற
வருள்புரிவா யிறையவனே. (க0ரு)

பிள்ளையிலாத்துயரந்தனைத்தீர்த்தெமை வள்ளலேகாருமென
வுரைத்தார், பித்தனுமனதொத்தசிவ கணத்தினை வருவித்திமுனி
வர்பத்தினியின்வயிற்றினி லுருவாகியே வருவீர் (ருயர்சுதி) மெய்த்
தவநெறியுற்றெனதுறவாகியே பெறுவீர். (க0சு)

இக்கணஞ்செல்கவெனச்சொலிமாமுனி வ[illegible]ருளிக்கயிலைக்
கெழுந்தார், இங்கிதசாரசக்குயின்மொழி மங்கை[illegible]ருவிக்கொழு
னரு மங்கிலமனதிற்கனிவொடுமெய்ப்புள குற்று (ரும்வலி) பங்க
முமெளிதிற்கெடவொருகைக்கனி பெற்றார். (க0எ)

மிக்குப்பெருகியதானகங்காநதி யொக்கலோகாசிதனைக்கடந்து,
விரியுந்தட நிறையும்புன லுமவென்றடர் தருவும்புலி யரவங்கொ
ள வெருவுங்கரி போர்புரி வனமுஞ் (சோலை) யிரவும்பகலறிதின்
றெனுமோர்பெரு வனமும். (க0அ)

ஆசையினாலேபிரயாசந்தோனுமற்கை விசிநடந்துதம்மாசிர
மத்தில் அஞ்சமஞ்சுநன்னடைக்கிளி கொஞ்சலஞ்சுமென்மொழிய
லர் கஞ்சமஞ்சுமின்னடியினள் வீற்றிருந்தாள் (ஆந்தக) னஞ்சும
ஞ்சனின்வரவது பார்த்தறிந்தாள். (க0கூ)

தேசம்புகழ்திருக்காசியில்வாழும்விஸ் வேசரருளினிற்கர்ப்பமு
ண்டாய்ச், சிற்சிலநாளிற்குமின்முலை யற்புதமாகித்திரனுனி கற்
பனையாகக்கருமணிபோலொளி தரவே (மாந்தளி) சொப்பனமே
னிக்கிடையணிசாலிழி வுறவே. (கக0)

ஆலிலையாம்வயின்மேலுமுயர்ந்திதழ் கோலமுகம்பொலன்வெ
ண்ணிறமாய், அச்சமுற்றயர்ந்திடுனடை இச்சைவைத்துணர்ந்திடு
முலை கச்சைவிட்டுயர்ந்திடுமங்கம் பொன்னிறமா (மேதை) பச்
சையுற்றியங்கிடுமின்பங் குன்னிடுமாம். (ககக)

சாலச்சிற்றுண்டிகட்கிச்சைகொள்வாளன்னம் பாலருந்தாம
னச்சிச்சைசெய்வாள், தள்ளாதிடைகொள்ளாமலே சன்னாய்வயி
றள்ளேசிறு சந்திமுட்டுவதாயினவே (மாது) நொந்ததிகஷ்ட
முமாயினவே. (ககஉ)

சீருடனேயொன்றிரண்டுமூன்றுநான் கைந்தாறுடனேழெட்
டொன்பான்முடிந்து, சித்தித்திடுபத்திற்பல னுற்றுத்தளர்வித்தொ
த்தொளிர் தேக[illegible]புண்ணுக நலிந்தனளே (மருவிய) போகமென்னு
னு மொழிந்தனளே. (ககங)

ஆடியம்மம்மாபாருமிதோவெந்தன் கூரியவாழ்விழிசோருத
டி, ஐயோயிடைநோகுதேயிது பொய்யோகளையாகுதேயிதை யா
ருடன்சொல்வேனடி மானே(தாக)மீருதென்செய்வேனடிநானே.



சிக்கெனநாவும்வரட்சியுண்டாகுது பக்கெனமார்பையடைக்
குதடி, செவியுணர்விலையேயடிவுயிர் குவிதலுமொழியாதிடர்தரு
கவலையில[illegible]ழியாதெனையுயிர் காரீரோ (மின்னுந்) துவழ்கொடியி
டையீர்ருகின[illegible]வாரீரோ. (ககரு)

பக்கம்வ[illegible]துப்பின்விக்கலுண்டாகுதென் னிக்கொடுந்துன்
பம்பொருக்கே[illegible]ம்மா, பாலனுசைவேணுமோயினி மேலுமாசை
தோனுமோஅ[illegible] பாவையேயென்னுயிர் போகுதடி (யென்னை)
நோவவேகண்[illegible]யர் வாகுதடி. (ககசு)

ஆதியிற்பிர[illegible]னைமூத்திதுவோவொரு மாதென்றுதித்திந்த
வேதனைக்கா, ளாகித்தளர்வாகித்தனி யாகித்துயர்மூழ்குற்றனன்
ஆதெய்வமேயினியான் சகியேன் (மறி) யாதுய்வனேலினியான்
சகியேன். (ககஎ)

கோதையரேயெனமாதுமருத்வதி வாதனைப்பட்டிடும்போதி
னிலே, கூனொடுகழியூணியேசிளை தோணிடுதிரைமேனியும்விழி
கொள்ளாமற்பீளையுந் தள்ளிடவே (கால்கள்) தள்ளாடிக்கோழை
யுங் கெல்லிடவே. (ககஅ)

மார்புரண்டாடியதோள் முலைமீதுவாய் நீர்வழிந்தோடுங்கிழ
க்கோதை, வந்துகந்தகந்தனிலொளி சிந்திசைந்தபைந்தொடிவயி
றைந்தயர்ந்தலைந்திடுமவண்முன் போயினளே(மலர்தரு) கந்தமு
ந்தருங்குழலியுமன் பாயினளே. (கககூ)

ஏர்பெறுநங்கைமருத்வதியாளம்மை யாரிருசீரடியைப்பணிந்
தே, எனதம்மணியுனைநம்பினே னினிவந்தெனைமனதன்புட னே
ழையைப்பார்த்தருள் பூணுமம்மா (இந்த) வேளைதற்காத்திட வே
ணுமம்மா. (கஉ0)

என்றிப்படிக்கன்னைகொண்டவருத்தமுங் கண்டிவணின்றிட
ன்றலவென், றிகவுளசிறுகுதலையும்வெளி யுதயவேமகள்பதறி
யேதன திருகுறங்கும் நடுநடுங்க மெய்சலித்தாள் (கன்னிய)ரிருவ
ரங்குபரிசடங்கு செய்கலுற்றார். (கஉக)

தொன்றனர்போய்மிருகண்டருக்குச்சுத னின்றுவந்துற்றன
வென்றுரைத்துத், தூய்தனநீராட்டியேசிறு [illegible]ய்நனிபாராட்டி
யேபொன் சுட்டிநுதற்கொரு பொட்டுமிட்டார் (ம[illegible]தர்கள்) திரு
ஷ்டிகளித்துமே தொட்டிலிட்டார். (கஉஉ)

ஆணிப்பொன்றொட்டிலின்மாணிக்கக்கல்லிழைத் தம்பவளச்
சிறுசங்கிலியோ, டசையக்குழலசையத்தன மசையக்குரலிசையுற்
றிட வாரிவளொன்றுதா லாட்டினரோ (கொங்கை) மீரவேகொண்டு
பாலூட்டினரோ. (கஉங)

காணவொண்ணுதகட்டிக்கனியேசெங் கரும்பேகனிந்தபலாச்சுளேயே, காணுற்றிடுதேனெத்திடும் ஞானத்தனேளுளித்திடுங் கண்ணேயினிக்கண் வளர்ந்திடுவாய் (பாலமு) துன்னுகினேக்கினெழுந்திடுவாய். (கஉச)

எட்டிரண்டானகலாமதியைப்பழித் திட்டிருமுகவட்டமுளா, யெங்கள்பங்கமுங்கொடவருள் பொங்குசங்கரன்றாவென தங்கமுங்குளிர்ந்திடவருமன் பானவனே (எனதிரு) கொங்கையுங்களிந்திடவமு துண்பாலகனே. (கஉரு)

திட்டமதானகுலக்கொழுந்தேநாங்கள் தேடியெடுத்ததிரவியமே, சித்திரத்தையொத்தகத்தி னத்துதத்தையைப்பழிற்று செல்வனேயென்றுமனங் களித்தார் (கொடும்) வல்வினையொன்றுபவங் கழித்தார். (கஉசு)

ஏதிலர்க்குற்றநிதிக்குவைபோலொரு மாதுசுகித்தபுதுமணம்போ, விருகண்ணுமிழந்தவனிரு கணமன்னுமிளங்கனியென வரதண்ணுமகன்றனைமடிமீது வைத்துத் (தங்குல) முறைபண்ணியரன்றனதடியே துதித்து. (கஉஎ)

வேதியராகிசொலக்குலமாதர்கள் போதவேமங்கலக் கீதைசொல, விந்தைப்படவந்துற்றவர் சிந்தைக்களிமுந்துற்றிட வேதமார்க்கண்டனென்னுமமிட்டார் (மணமொரு) காதமார்க்கின்றமின் தாமமிட்டார். (கஉஅ)

கைக்குப்பொன்காப்புக்கொலுசணைஞாணும் கழுத்திற்பொற்பூஷணந்தானணிந்து, கனகதண்டைகிண்கிணிமணி புனைசதங்கைமின்பணியொடு கற்பனைமேன்முருகிட்டிடைக்குச் (சரிகையி) னற்புதமானதோர் பட்டுடுத்தி. (கஉகூ)

அக்கரையாகக்கண்ணுக்குமைதீட்டி யுச்சிக்கொண்டையிட்டு நற்பக்குவமா, யாடியேதெருவீதியின்மிக வோடியேவிளையாடியேவரு மைந்தனைக்கொஞ்சியே முத்தமிட்டார் (வய) தைந்தினிற்கல்வி பயிற்றலுற்ருர். (கஙo)

மாமறையோதியமேன்முறையாளரைத் தாமழைத்துச்சிறுபான்மையதா, மைந்தனுக்கருந்தமிழ்பயி லுந்திறத்தையிங்கருள்கென மாயிருகண்ட ருளீத்தனரோ (சற்குரு)தாமறைகின்றசொற்கற்றனரோ. (கஙக)

ஆமறுசாஸ்திரம்நான்மறையோதிநன் னேமமொடுந்தவந்தாமறிந்து, ஆருங்கலைதெரும்பெரி யோருங்களிகூரும்படி யண்டர்கொண்டாடச் சபைதனிலே (முனிமார்க்) கண்டன்வந்தானிப்புவிதனிலே. (கஙஉ)



தந்தைபதந்தனைவந்துபணிந்திடும் விந்தையுளசிறுமைந்தனையுந், தழுவியேமடிமீதுவைத்து முழுமனதுடனேகதித்துசந்தோஷமார்கன் மூழ்கின்ருர் (முனிவர்) விந்தைய்ாய்நீடூழி வாழ்கவென்றுர். (கஙங)

(வேறு)

இந்தப்படிக்கிவளர்ந்திடும்போதுதன்மைந்தனுக்கன்றரன்றந்தவய, தீரெட்டுமாக மனத்துயர் மீறிட்டுநோகச் சலிப்புடனென்செய்குவமினியாமென மன்செய்வனேயினண்மாமுனி யிருவர்நெஞ்சுமழலினின் மெழுகாயுருகுற்ருர் (அன்பெனு)மறிவழிந்தும்மழலையின்வலையாலி றுகுற்ருர். (கஙச)

நானிலமும்புகழ்ஞானசுக்கியானநே ரானவன்பானவென்பிராணேசா, நன்மகன்வயதாச்சே ஐயோபாவி நமன்வருகுவதாச்சே முன்னுட்செய்த நற்றவமதின்வருபாலனை யுத்தமகுணமுளசிலனை நாம்பிறிந்துற்றிடுங் காலமிதோ (தீவினை) யோம்பிறந்துய்த்திடுங் கோலமிதோ. (கஙரு)

தேனலர்வாயின்மொழிகண்டியமனன் பானமகனைவிடுத்திடவே, சித்தம்வைப்பாளு அல்லாமற் பிடித்திழுப்பாளு பொல்லாதவென் சிந்தைநோக மைந்தனையுயிர் சிந்தவேகவர்ந்திடுவனே தெய்வமேயொன்று மறியோமே (நாங்கள்) செய்தவமொன்றுங் குறையோமே. (கஙசு)

தேகியென்றோருக்குமுதளிக்காமற் சிடுத்துவைதோமோஅடுத்தவரைச், சீர்குலைத்தோமோ ஒருவர்தன் னேர்கலைத்தோமோ விருகண்முன் றெரியக்குர னெரியக்கறை சொரியக்கொலை புரியுற்றமோ செய்தொழிற்கூலி குறைத்தோமோ (பிறர்பொருள்) கைதனிற்கோலி யிரைத்தோமோ. (கஙஎ)

ஆகடியஞ்செய்துநற்பெரியோர்மனம் நோகவைத்தோமேமகப்பாவீ, யாதிருந்தோமோ சிவனடியவைமதி யாதிருந்தோமோ புவனமதனிலினி யாரும்பழிகூறியேநகு வாருஞ்சிலர்தூறவேநமை யாயன்விதித்த விதிக்குறையோ (ஒருசிறு) சேயென்றுதித்தேமனுக்கிரையோ. (கஙஅ)

நேராயொருவர்பசித்திருக்கமுகம் பாராமலன்னம்புசித்தோமோ, நேசம்வைத்தோர்தம்பொருளின்மே லாசைவைத்தோமோமதத்தினல் நிலமதிரநடந்தோமோ குலமரபுகடந்தோமோ நெஞ்சொவ்வக்கோட்சொ லுரைத்தோமோ (ஏழையர்) கெஞ்சுவபார்த்துச் சிரித்தோமோ. (கஙகூ)

சீராமகனேநினைக்கநினைக்கவென் பேரானநெஞ்சுபகிரென்குதே, செயல்குறியேனே சுதனைவிட்டுயிர்தரியேனே ஐயோசிவனே சிறுவனொழிந்தபின்னோ அருமைகுலைந்திடுவேனோ சிந்தைமறக்குதும்நெறி யேதோ (பெற்ற) தொந்திசுருக்கென்றெரியுதே. (கச0)

என்றிவரித்துயர்கொண்டுவருந்தி யிளைத்தனரங்கலைத்திடவே, யித்தருணத்தில் மார்க்கண்டன்வந்துற்றவிடத்தில் தாய்தந்தையரின் னிருவிழிநீருருவிசுடர நிறைமுகமாரொளிசெடவருமெண்ணமென்னென்ன விளம்பலுற்று (னெய்தரு) புண்ணிலம்பென்ன வுளம்பதைத்தார். (கசக)

கன்றைப்பிரிந்திடுமாவெனத்தாவிக் கலக்கமுற்றென்னருங்காதலனே, கவலையேனென்றாய் என்னென்றினி நுவலுவோம்நன்றாய் நன்மணிநிரைதிகள் கஞ்சங்கொஞ்சுந்திருமுக வஞ்சொன்மிஞ்சின்றருசுக காவிலுயர்த்திடு யான்சிறந்தா (யிந்தப்) பாவிவயிற்றினி லேன்பிறந்தாய். (கசஉ)

பூமியிற்பிள்ளையில்லாதவர்க்கேனும்யாம்பெற்றுமரும்பாவியானோமடா, பொற்பறிவுளமகனே நான்மறையறுகலை சொற்பொருள்றிபவனே மேன்மையினெடுமுன் பொருதாழ்வுமிலாமற்புகழ்பெறவாழ்கும்னுளிற்றிகள் போதனவைக்குமுனி நடந்தார் (சில) மாதரகத்தி னினிதுவந்தார். (கசங)

தாமக்குழலியர்க்காமுபசாரஞ்செய் தேமதுவர்க்கமேரடன்னமிடத், தன்மனதார்த்து அக்கன்னியருமென்முகம்பார்த்து மிக்கன்புளசிறு சந்ததியுண்டோவென்றனர் நொந்திலையென்றேனென்றவர் தாமுமுண்ணும லெழுந்துநின்றே (பாவிக) ளாமென்றெண்ணுமன் மொழிந்துசென்றார். (கசச)

தேடியேவந்தவிருந்தினருண்ணாத தீவினைசெய்திடும்பாவியென்றே, சிந்தைநொந்துற்றேன் அப்போதுநின் றந்தைவந்துற்றார் கனிந்திடுஞ் சிறுநகையொளிபெறுமுகமதி னிருண்மிகுதுயர்வருகவுமுள சேதியென்பெண்ணேவிள் ளென்றுரைத்தார் (ரிஷி) மாதர்வந்துண்ணவில்லையென் றுரைத்தேன். (கச௫)

கேடிலநெஞ்சங்கலங்கிமுனிவர்பொன்னுடுறைகின்றதினீடியதோர், கீர்த்தியின்வேதன் வியாசரைப் பார்த்தருணதன் இப்பாருளர்க் கினிதாமகவிலையேலருங் கனிகேவலமுளதோவென வில்லெனவில்லவர் செய்வகையே (இனிச்) சொல்லெனவிள்ளுவ ருய்வகையே. (கசசா)



சம்புசதாசிவன்றன்னடிக்காட்படுமன்பருமிக்கதவம்புரிவோர், சந்ததிபெறுவாரோ யாரன்பத முந்துதியுடையோரோ யாமென்றோதி காலேநகையமுந்தவ மேலாமியல்பாலுமத் தற்பரன்றன்னைப் பணிந்திடவே(முனி)சொற்படியெண்ணித்துணிந்திடவே.

நம்பன்வளர்திருக்காசியெனும்பதி நாடியேநாங்கள்தவமிருந்து, நாரியோர்பாகன் மனக்கண்டு வீரியமாக வுனக்கன்று நலமாய் வயதிரொட்டென வளமாயரனுரிட்டிடும் நாள்வரலாச்சுதடா மகனே (எம) னுள்வாரவாச்சுதடா சுதனே. (கசஅ)

என்னென்றினிச்சகிப்பேனுனைப்பிரிந் தெப்படியிப்புவனத்திருப்பேன், என்சிறுபாலா நலமேலார்மன தன்புறுசீலா ஐயோயென்வழி றெரியவேமனமுறியவே நமனறியவேகொலை புரியவும் நானிந்தவிதிக்கென்ன செய்வேனடா (இனி) யெந்தவிதத்தினிலுய்வேனடா. (கசகூ)

வண்ணக்கிளியைவளர்த்தியல்லனுக் குண்ணக்கொடுத்தல்போலுன்னையெம, வள்ளன்முன்பாகக் காலதூதர் கொள்ளைகொண்டேகக் கொடுத்துயிர் வாழ்வனோயினி யூழ்வினைதனி லாழ்வனோதுயர்மூழ்வனோயிம் மானிலத்தோர்க ணகைத்திடவே (அன்பு)தோனுளத்தோர்கள் திகைத்திடவே. (கரு0)

கொஞ்சும்பரிவுளாஞ்சிதனேமன தஞ்சுதேபாவிநானென்செய்குவேன், குமரனைநிகர்வாமா மறைநூல்வலனெனவயரார்கள்துதிநேமா திராளாமுதுறு குளிர்மதிமுகத்திறொளிவையு மிளநகையதொத்தமொழியையுங் குவலயத்தினிக் காண்பேமோ (நாங்கள்) தவமியம்றுற்றதும் வீண்போமோ. (கருக)

நஞ்சணிகண்டருளாற்கிடைத்திடு மென்சிறுபாலனேயஞ்சுகமே, நான்றனியாக நீதென்றிசையிறை யோன்பதிக்கேகத் தகுமோபாவியெனங்கமுமழல்பொங்குதெனிரு சண்களிறொளிதங்கிய மணி யானவனேயுனைப் பெற்றதினும் (பலன்) காணிலனேமயக்கற்றவனே. (கருஉ)

எட்டிநடந்திடுஞ்சிற்றடிநோமெனத் தொட்டுமுத்திட்டுவளர்த்தோமே, அஃதா என்மகனே எந்தன் கண்மணியே முன்னுளிறையவனெழுதியமுறையோ நிறைதவவளமறுகுறையோ ஈசரளித்த வரந்தானோ (நாங்கள்) பூசைசெயுற்ற திறந்தானோ. (கருங)

மட்டில்புகழ்மிருகண்டர்குலத்தினிற் றிட்டமதாய்வந்துதித்தவனே, அடா மரகதமணிமார்பா எங்கட்கானது பாகதிதருதீபா இப்போதேமன் வந்துவளைந்து தணிந்து விரைந்துகளைந்துசினந்துனை வாவென்றழைக்கிலே தெளிவுரைப்பே (னிந்தத்) தீவினைக்கென்றோநான் பெண்பிறப்பேன் (கருச)

காரிக்கிடாவினிலேறியேயமனுஞ் சீறிவருகவும்நேராய்நீ, கண்டிடுவாயோ மருமொழி விண்டிடுவாயோ உந்தனுள்ங் கலங்க கலங்கண்மயங்க வுலங்கொள்புயங்கள்குலுங்க கைதனிற்சூலத்தி லெத்துவனே (உந்தன்) மெய்தன்னைப்பாசத்திற் சுத்துவனே. ()

பாரினுன்னைநமனுருக்கொப்பித்தினி யாரைத்துணையெனக்கோருவண்டா, பஞ்சைபோலானேனும் யாவருக்குமஞ்சுவதானேனும் எந்தன்னெஞ்சது பதறுதேயுட் வுதறுதேபொறி சிதறுதேமனமதிருதேயுன் பற்றுமின்றேடினி யற்றதடா (உன்னைப்) பெற்றவயிறனல் பற்றுதடா. (கருசு)

அல்லலுறத்தெங்கட்கென்றுநந்தன்னணிரந்திய தாலத்திமைப்பாயென்றெண்ணினேனே, அருமைமார்க்கண்டா என்கண்ணேவிச் சிறுமைபார்க்கண்டா அங்கந்தளரவு மாவிசோரநொந்தலேகுறுபாவியாகுமென்றலைதனி லன்றெழுதும்பிர்ம்மன் சுற்பனையோ (அந்தக்) குன்றவில்லீசன்றன் சொற்படியோ. (கருஎ)

வல்லபமிக்கவெருமைக்கடாவினிற்கொல்லும்புலியெனச்சீறிநமன், வந்திடுவானே உன்னங்கம் பிளந்திடுவானே கன்னற்சிலையுள மதனுமதிவதனுதவ மதினுல்வருசுதனுகிய மாதவனேயென்றெண்ணிக் கனைந்தாள் (முலை)மீதுகண்ணீராறெனச்சொரிந்தாள்.

தத்துவவேதமுறைப்படியோதிய வித்தகன்மார்க்கண்டனுத்தமியே, சஞ்சலமேனோ நமனைக்கண் டஞ்சிடுவேனோ புவனத்திற்றற்பரன்றனைப்பணிந்து நற்றவஞ்செயத்துணிந்து சங்கரனாருள் பெற்றிடுவேன் (ஏம) கிங்கரர்வாரா தகற்றிடுவேன். (கருஅ)

மெத்தவுமாசையாய்ப்பெற்றுவளர்த்திடுஞ் சிற்றடியேயென்னபுத்தியடா, விதிவசமதுபோமோ பதினாறெனும்வய தநுதிசமலதாமோ சுதனேகாலனும் விழியனல்செறிந்துருப்பன மொழியதிர்தரங்கமொப்பன வெண்பிறைப்பற்கள் கடித்திடுவான் (அங்கம்) புண்பெறக்கட்டி யடித்திடுவான். (கசு0)

ஆலமருந்தியநீலகண்டேசர்தங் கோலமலாடிக்காளுடையோர்க், கம்புவிமீது வருத்தும்ந மன்பயமேது மனத்துய ரறவிருவரு மொருமனதுட னரனடிதொழுதிருமறலியி னுணவுங்குன்னிடவோட்டிடுவேன் (அந்தத்) தோணுவின்பொன்னடிக் காட்படுவேன். (கசுக)

வாலவயதுளபாலாவுனக்கதி சீலமுடன்மணக்கோலஞ்செயு, மன்புவைத்தோமோ எங்களிருகண்களித்தோமோ தவஞ்செயமனமாயடர் புனமீதொரு வனுமகுவே னெனவேசொலு மைந்தனேயமனை வெல்லுவயோ (பாதம்) நொந்திடநீவழி செல்லுவயோ. (கசுஉ)



செல்லுவேனென்மறைவிள்ளுமெய்யன்பன்றன் கள்ளவிணைமலர்மெல்லடிக்கே, சித்தம்வைப்பேனாய் மூவாசை விடுத்திருப்பேனாய்ப் புலன்களைச் சிதறுதொருமதிகொண்டென தெதிரேவருமொருசண்டனைச் சிந்தைகலங்கிட வீழ்த்திடுவேன் (பாதா) ளந்தனிலெய்திட வாழ்த்திடுவேன். (கசுங)

வல்லவன்பேறுலெங்களுள்ளந்தெளிந்திடச் சொல்லுகிறாய் சிறுபிள்ளைமதி, வருத்தமிலாயே நடுனைக்கண் டிரத்தமூவாயே பொன்னாற்செயு மணிமயவுஜிதா ஹிதரத் குணநயரஜிதாமிரதபத் மாசனையானமின் வாண்முகனே (இனி) யோசனையென்னசெய்வோமகனே. (கசு௪)

இத்தனையாகவருத்தமென்னென்றனைப் பெற்றதாய்தந்தையிரத்தனிட, மென்னையொப்பிப்பீ ரெமனைத் தன்னைத்தப்பிப்பீ ரெனப்பணிந் தேற்றித்துதிசாற்றிந்துய ராற்றிப்பவமாற்றுற்றிடு மெம்பெருமானருள் தந்திடவே (மார்க்கண்) டன்பரிவாக நடந்திடவே.

பத்திருமூன்றுவயதளித்தெந்தன்மேற் சித்தமகிழ்ந்திடுங்கர்த்தனைநான், பார்த்திடவேனும் இடர்தனைத் தீர்த்திடவேனு மெனமிகு பரிவுடனனல்மெழுகெனமன முருகிடவருள்பெருகிடவழிபற்றியேசென்றோர் வனத்தினிலே (தவஞ்) சித்தியாமென்றவ் விடத்தினிலே. (கசுசு)

தேருஞ்சுனையினன் னீரிற்குளித்தலங் காரமுடனேவெண்ணீறணிந்து, சித்தமொன்றாகிக் கசடறு முத்தமனாகி மறைசொலுந்திறமந்திரஜெபமுஞ்செப சரமுந்தியகரமுந்திகள் திவ்யபீதாம்பரமுந்தரித்து (மன) மொவ்வவேதாந்த நலங்குறித்து. (சசுஎ)

வீறுடனேயுருத்திராட்சமும்பூண்டறமேதருகுண்டலங்காதிலிட்டு, வேதநன்னூலு முன்மார்பினிற் போதமுன்னூலுஞ் சைவாகம விதியிற்சிவகதிபெற்றயன் விதியற்றிடுமதியுற்றிட வேதியருந்தவஞ் செய்யலுற்றார் (அங்கே) தீதிலநாரத ரெய்தலுற்றார். ()

எண்டிசைசுற்றியகுண்டுணிநாரத ரண்டையிற்கண்டுமார்க்கண்டனுமே, எந்தனைத்தேடி முனிவரீர் வந்ததென்னடிச் சொல்வீரென விந்தொளிர்வத னந்திகளதி சுந்தரமுகமைந்தனேயுனதெண்ணமென்னதவம் பண்ணுவதே (னிந்த) புன்னைவனந்தனினண்ணுவதேன். (கசுகூ)

வண்டமிழ்தேர்மிருகண்டசுதாயினி விண்டிடுவாயெனவண்டர்தொழும், மாமுனியாரே எமறந்தைதா யாமிருபேரும் தவஞ்செய மதிசூடியபெருமான்வர மீதினலொருபதினாறெனும் வாலவயதுகொண் டேவளர்ந்தேன் (இனிக்) காலன்வரவுகண் டேதளர்ந்தேன். (கஎ0)

உம்மையல்லாலினியுற்றதுணைகாணே னின்மலரேயெனக்கு
ண்மைசொல்வீ, ருமதடிசரணென்றான் காலனைவெலுநிய மமதரு
ள்செயுமென்றான் பாலாகேளிவ் வுலகினையருளுந்திறமுள லைமக
ள்கொழுனன்றனைமன துன்னித்தவஞ்செயிற் றேற்றிடுவார்
(அரன்) றன்னைத்தொழும்வகை சாற்றிடுவார். (கஎக)

செம்மையுடனுபதேசமடைந்தென்றும் நன்மைபெற்றோங்கி
வளர்ந்திடுவாய், செலவருளென்றே பிர்ம்மன்பதி நலமுறச்சென்
றே ஒருநான்முகமுள தேவியொருகாவிற்றனி யாவேதியனுவிற்
றுதி செப்பியருந்தவஞ் செய்யுகிறு (னும்மா) லற்பமதாயுடல்
நையுகிறான். (கஎஉ)

பூதலத்திலவன்மாதவத்துக்கினை யாதுரைப்பேன்மலர்மீதவ
னே, புண்ணியசுசீலன் மிருகண்டர் தன்னிடபாலன் றனக்கருள்
போதித்திடும்வேதத்தினை யோதிப்பொருள்சோதித்திடும் பூரண
னேசெல் லெனமொழிந்தார் (சத்தியம) வாரணனுமெல் லெனவெ
ழுந்தார். (கஎங)

நீதிசொலுஞ்சுகாதிமுனிவர் சங்கீதமுடன்சுருதி யோதிட
வே, நித்தியகமனர்நீட அரம்பையர் கிடதஜெனு தத்திமியென
வாடக் கவரிகள்போட நிறைதங்கியகனமென்சிறை யுறுபொங்கன
மிசையன்புட னேறியேபிர்ம்மனும் வந்தனரே (செய்தவ)மேனை
யினுண்மையறிந்தனரே. (கஎச)

நிட்டையின்மூடியகண்களையயனும் பொட்டெனவேவிழி
த்திட்டயனுர், நிறைபுகழ்கொண்டாடிப் பதந்தனின் விரைகமிண்
மலர்சூடி உயர்கதிநாடி நீதாபுவனுதாரமென் னுதாமலர்வேதா
வருணேசம்வைப்பிர்சரணென்றடைந்தே (னுப) தேசஞ்செப்பீ
ரென வும்பணிந்தான். (கஎரு)

இட்டமுடன்பிர்ம்மன்கிட்டவழைத்தாசை விட்டவனேயெ
ன்னகஷ்டமென, வித்தவஞ்செய்தா யென்னுனுடன் மெத்தவும்
நைதாய் மார்க்கண்டாவுன் னெண்ணந்தனையுரையெனவிரு கண்
ணின்றொழுகியபுனலொடு மேமனைவெல்ல வகையருள்வீர் (பூசா)
நேமமும்நல்ல தகைபுரிவீர். (கஎசா)

கந்தமலர்க்குழல்வாணிமணாளாவென் றந்தமுடன்சொனு
மைந்தனையுங், கருத்துறநோக்கி மனத்துள வருத்தமும்போக்கி
பஞ்சாட்சரம் காதுக்குளேயோதிச்செயல் போதித்திதுசாதித்தி
டக் காலனுமஞ்சி வணங்கிடுவான் (அறிவுள) பாலனேவிஞ்சை
யுணர்ந்திடுவாய். (கஎஎ)



பந்தமதானசென்மந்தனைநீக்கு மருந்திதுவேபரமன்றனிரு,
பாதந்திற்சேர்க்கும் நியமஞ்செயும் வாதத்தைத்தீர்க்கும் தீவினை
போக்கும் பயனுமிது செயினுமதி சயனேயென வயனுர்சொலப்
பத்தியுடன்சிவ பூஜைசெயு(முறை)சித்தமகிழ்ந்திடவேயிசையும்.

என்றுசொலுமுனிவன்றனைநோக்கியே நன்றுநன்றென்று
மகிழ்ந்தயனு, ரெண்டிசையினுமோடி சிவஸ்தலங் கண்டிசையொடு
பாடிக்கதிபெறநாடி எடுத்தமலர்தொடுத்துமயல் விடுத்தானையடுத்
துநிதம் ஏகமனதுடன்பூசை செய்வாய் (சொல்லும்) ஆகமநூல்
வழியேயிசைவாய். (கஎசு)

மன்றுணடஞ்செய்யரன்றனிடார் தனி லின்றுசெல்லென்றுபுக
ன்றெழில்சேர், மலரவனேக மார்க்கண்டன்றன் னுளமகிழ்வாக
வில்வவனம் வளரிங்கிதநளினன்மத களிறின்முகமுளவைங்கரன்
மாணடிக்கன்பனுய்ப் போற்றவென்றே (புதுமலர்) தானெடுத்தம்
பதஞ் சாற்றினின்றே. (கஅ0)

பாதிமதிச்சடையோனருளால்வரு மாதிகணாதிபனேசரணம்,
பத்திரபுட்ப மெடுத்துனை நித்தமர்ச்சிப்பேன் கொடுந்தொழிற்
பாசந்தனை வீசுஞ்சமனுசம்பட வேசங்கரி பாலகனேயெனைக்காத்
திடுவாய் (துயர்) சாலவினைதனைத் தீர்த்திடுவாய். (கஅக)

மந்திரமூமுக நாதாவெனத்துதித் தாதவனுருதிக் காதமுன்
னே, மதியுடனோடிச் சிவகங்கை நதியினீராடி மலர்வனம்நாடி
வாசித்திடுமருமுல்லைகள் பூசைக்கிசைவனமல்லிகை மந்தாரைவில்
வதளமெடுத்தே(பொழில்)சிந்தாதகுல்லை மலர்தொடுத்தே(கஅஉ

நேசமுடன்காசிவாசமதான விஸ்வேசர்பதந்தனைப்பூசைசெ
ய்தே, நின்மலநிறைதேகா சிவசம்போமலை யின்மகளொருபாகா
மான்மழுவாகா நின்றாள்பணி கின்றேனடர் கன்றூர்தியை வென்
றானுக நின்னையல்லாற்கதி வேறுமுண்டோ (மறை) பன்னுமல்லா
லுனையறிவாருமுண்டோ. (கஅங)

ஆசையெனுங்கடலாம்விசாலாட்சிபிரா ணேசாவெனப்புகழ்ந்
தேசிவபிரயா, கைப்பதியினைநாடிப் பிரயாகேஸ்வரர் நற்பதமுடி
சூடிக் கோதாவரிநதி யாடிப்பண்பாடிக்கொண் டாடிக்கண்டோடி
த்தொழு தங்குளபுட்ப வனம்புகுந்தே (ஐயன்) கொங்கலர்கொய்
து மனங்குளிர்ந்தே. (கஅச)

நேமமதாகராமேஸ்வரத்திற்சென் றிராமலிங்கர்க்கர்ச்சிப்போ
மெனவே, நேத்தியதாகித் தனுக்கோடி தீர்த்தத்தின்மூழ்கி வினை
த்தேகம் நீங்கிடுமெனவெனதிருவீமன மேங்கிடுதினியுனதருளெ
னும் நேசம்வையீர்செகதீஸ்வரனே (மாயன்) பூசைசெய்ராமலிங்
கேஸ்வரனே. (கஅரு)

தீமைவிளைக்குநமன்றனைவென்றிடும் ஓமஹாதேவசம்போ சங்கரா, திங்களைச்சூடி எனத்துதித் தங்கிருந்தோடித் தர்ப்பாசயனத் திசனைமெய் வாசனையதி பூசனைசெய் தாசையினொடு வேதுபதி தனை வந்தடைந்து (லோக) நாதர்பதந்தனை யும்பணிந்து (கஅசு)

ஆலவாய்ச்சொக்கரொடுங்கயற்கண்ணியம்மன் திருச்சந்நிதிகண்டுவைகை, யாற்றிற்குளித்து மனத்துயர் மாற்றிக்களித்து தழைத்தபூங்காவுளமே வொளிதுன்றலர் கூவிளமாவிளமென்றளி ராசையதாகப்பறித்தனரோ (சுந்த) ரேசர்பதத்திலர்ச்சித்தனரே. ()

நீலகண்டேசாநமோநமோகைதவ ளூலடிபட்டமெய்க்கூலியனே, நின்பதம்போற்றி வருங்காலன் றன்பயமாற்றீ ரெனச்சொலி நீங்கித்திருவாதவூரொனு மாங்குற்றிறைபாதமதனை நேயமுடன்றுதி செய்தனரோ (அரி) தாயபெருந்துறை யெய்தினரே. (கஅஅ)

ஆனையுரித்துமதனைப்போற்றியு மானுமழுவுங்கரத்திலங்க, வாற்றல்தந்தோனே குருந்தடி வீற்றிருந்தோனே கூடற்கோமானறியப்பரிபோக்கியசிறு நரியைப்பரியாக்கியேமுன் மாணிக்கவாசகர்க்காகவந்தாய் (நிருதர்செய்) யாணிப்பொன்னலயத்தேயமர்ந்தாய். (கஅகூ)

மோனமதானமெஞ்ஞானஸ்வரூபனே தினதயாளயோகீஸ்வரனே, முனிவோர்துதிபாதா காலன்வாரா தெனையாளருணீநா குருநாதாவென மொழிந்தினருடமைந்துவிரை வெழுந்துகதிர் விளைந்தபொழின் மொய்கிரணத்துதயனையெதிர்வருபுன லென்றே (காவிரி) யுய்கயல்தத்தியதிரிசிரபுரமது சென்றே. (ககூ0)

பொன்னிநதியாடித்தாயுமானேசனைப்பூசைசெய்தேஜம்புகேசருக்குப், பூவலர்கொண்டு திருவானைக் காவலிற்சென்று நிராதார பூரணஜல தாரணநிக ளாரணஜெக காரணவுனைப் போற்றிசெய்தேனிடர் தீர்த்திடவே (என்முன்) கூற்றனெய்தாதுயிர் காத்திடவே. (ககூக)

* மன்னும்வெண்ணாவனிழற்கீழமர்ந்திடும் புண்ணியனேயெனப்பன்னிமறை, வல்லவனன்றே திருவையா றெல்லையிற்சென்றே நமன்செயும் வஞ்சனைநாசம்படவருள் பஞ்சனதீசன்றனதிரு மலரடிகண்டுமனமகிழ்ந்தே (வில்வ) தளமதுகொண்டர்ச்சனை புரிந்தே. (ககூஉ)

அங்கிருந்தேகித்திருக்குடந்தைப்பதி தங்கிவளர்ந்திடுமங்களமா, மம்பிகைநேசன் நிரஞ்சன கும்பலிங்கேசன் திருவடிக் கன்பாய்வெகு தெம்பாய்மல ரும்பூவதும்பான்மதி யாருஞ்சிரமிசைசாற்றி நின்றே (பக) டேறுஞ்சமன்பயமாற்ற வென்றே. (ககூங)



கங்கைபாவுந்திருவிடைமருதூரினிற்றங்கியேசோழன்பிர்ம்மத்தியறக், காட்சிதந்தானே பேய்முலையம்மன் பாற்சிறந்தோனே கண்டேமனங் களைந்துமலர் சொரிந்துதுதி புரிந்துமதி நிறைந்த வருட்காஞ்சிசொலிப்பணிந்தானரோ (திரு)வாஞ்சியமுற்றடைந்தான்ரோ. (ககூச)

பொற்புளவன்முலையம்மைபங்காளனையற்புதவாஞ்சிலிங்கேஸ்வரனே, புனிதச்சடைநீதா மதனைக்காயு மனல்செறிவிழிநாதா வருள்தாதா வைம் பொறிகலங்கவெஞ்சமர்புரி பரிகலங்கியஞ்ச வுயிரு பூங்கழற்காளெனவாகியே (கதித்) தோங்கருணசலமேகியே. (ககூரு)

தற்பரனுமருணேசருண்ணாமுலை பொற்பதம்போற்றிசெய்தற்புதமாந், தழலுருக்கொண்டாய் மாலயனடிமுடி தொழவவர்க்கண்டாய் கறைகண்டா மதி தங்கும்பொங்குங்கங்கை யடங்குங்கொங்கின்றுங்கஜடாதரவென்றுகொண்டாடினர் (ஆவி) கெடாதுறநின்றுபண்பாடினர். (ககூசு)

மற்றங்கிருந்தெழுந்தேதிருவாலங்காடொற்றியூர்மன்னுஞ்சிவபுரமும், மகிழ்கொண்டுகதித்து அரகரசிவவரு குகவென்றுதுதித்து அருளொடுகுதித்து மதியொடுவேகவதிசாயூ நதியடர்சீரநதி பரவு மம்புனன்மூழ்கியேகச்சிவந்தார் (வெகு) தென்புடன்பூசை செயற்கிசைந்தார். (ககூஎ)

நற்றவஞ்செய்யுங்காமாட்சியோர்பாகனே வற்றலறுந்திருக்கம்பைநதி, நடுவில்வந்தோனே உந்தன்றிரு வடிதொழுதேனே இறையோனே யுனை நம்பினேனும்பர்தொழும்பத நம்பனேயும்பல் கொளுஞ்சம னச்சங்கெடுத்தெந்தனை யாளவே (திருக்) கச்சிஏகாம்பரதயாளுவே. (ககூஅ)

வாதனை தீர்த்தெனையாதரித்தாளவென்றோதியேநிதமுபொன்முகிலி, மானதிமூழ்கி மார்க்கண்டருள் ளானந்தமாகி வேடனெச்சில் வாங்கியுண்டவாயனேயருளோங்கிநின்றதூயனேசிறு மைந்தன்மேற்சித்தமும்வையாயோ (வரும்) அந்தகர்க்குத்துயர்செய்யாயோ. (ககூகூ)

மாதவர்போற்றுங்காளத்திவிஸ்வேசாஞானதையவம்மைதங்காதலனே, வரமருளென்றே தில்லைச்சிதம் பரமதுசென்றே சிவகங்காநதி வருபுனன்மூழ்கிக்கனிவுட னொருமனதாகிப்பனிமலர் வாசனைவீசியமண்டபஞ்சேர் (கனக) சபேசநடேசனைக் கண்டடைந்தே. (உ00)

தாமமுறுங்குழல்வாமியெனுஞ்சிவகாமிமகிழ்ந்திடப்பூமிசை
யோர், தங்குறையருள்செய்ய விண்ணோர்மகிழ்வொடு கொங்கலர்
மழைபெய்யத் தாதெய்யத்தா தக்கிடகிடதஜெம்ஜெம்ஜெழ் திக்கி
டகிடத தொங்தொங்தொம் தளங்குதக ததிங்கணத்தொமௌக்
(சிற்சபை) விளங்கநடமிடுந்திருப்பாதனே. (உ0க)

ஏமனெனைத்தொடாமலருள்புரி யோமெனுமுண்மைமகிஷ்க்
காமியனே, என்றடிதொழுதேற்றிச் சீர்காழியில்வந் தன்மெருரு
பொழுதாற்றி மலர்சாற்றிப் புவி எங்கும்விளங்கிடவுங்கிருபை த
ங்கிவளர்ந்தருளுந்திரிபு ரேசனேசட்டைநாதாவெனைத் (தொடர்)
பாசமகற்றிவிடாயென. (உ0உ)

தீவினைபோக்கிக்கதியருளும்வயித்தீசரடிபணிந்தாசையுடன்,
நீறமதாகிக் கௌரிமா யூரமதேகிச் சிவார்ச்சனை செய்தேமருவா
ரோர்மலர் கொய்தேதிருவாரூர்வளர் தியாகராஜேசரைப்போற்றி
யே (லோக) மாய்கைசேராவகைதேற்றியே. (உ0ங)

பாவனையாய்ச்சுந்தரர்க்குத்தூதேகியதேவனேயல்லியங்கோ
தைமகிழ், பண்புடையானே அடியருக்கன்புடையானே நமன்வ
ருவானெனப் பயந்துமன தயர்ந்துகன முயர்ந்தவருணயந்துவிரி
பாரினிற்சண்டனைவிழ்ந்தவே (கடை) யூரனைக்கண்டினிவாழ்த்த
வே. (உ0ச)

துய்யவமூர்த்கண்டதிமூழ்கியேமெய்யில்விபூதிருத்திராட்ச
முடன், சோலையின்மலர்கொண்டேமாமணிநிறைதிரு வாலயமது
சென்றே ஓமரகரசிவ சோதியேசுடரேயெனையெம காதகராடாராவ
கையருள் தோகையபிராமிமகிழ்சீலனே (மிகவன்) பாகுமடியார்க
ளனுகூலனே. (உ0ரு)

வையகமீதாயிரத்தெட்டெனுந்தலமையயனேநின்றெடுமா
யினவே, வயதின்றெடுமாச்சே சிவனேயுந்தன் செயல்குன்றிடலா
ச்சே எமன்வரலாச்சே மான்மழுவாகாவளாதரு தேன்மொழிபா
காவுனதிரு மலரடி தந்தெனைக்காரீரோ (என்றும்) நிலைபெறலந்த
ருள்தாரீரோ. (உ0சு)

அன்னைபிதாகுருதெய்வமும்நீயலாற்பின்னையொருவர் துணை
காணேன், அமுதர்தனிங்கோ அபிராமியெனு மூமைமகிணேசா
கடையூர்வாசா அரகரசிவ திரிபுரபவ வரவணிபுய சுரர்பரவிய
வானந்தமெய்ப்பொருளாயனே (விடங்) தானுண்டெழிற்பெறும்
வாயனே. (உ0எ)



OH,35MAHJM 15
M77

சென்னியிலாறுளபன்னகபூசனவின்னமூர்த்தீசனின்பொன்
னடிக்கே, சேவித்துநிற்பேன் பன்மலர்கொண்டருள் பாவித்தர்ச்
சிப்பேன் தாய்கர்ப்பத்திற் சேராதருள் தராய்கடையூராயினிவா
ராயென் சிந்தையகற்றிக்கதிபெறவே (பொல்லா) வந்தகன்வெற்
றிக்கிடவுறவே. (உ0அ)

மல்லிகைமுல்லைசெந்தாமரைநந்தியாவிர்த்தமொடு
ந்தவன, மருக்கொன்றை செழுந்தும்பை யறுகிவைகொண்
டே சக்கஸ்திரகா மஞ்சாலியுனை யஞ்சலிசெய வஞ்சலிலென வுஞ்
சொலியெம வாதனைதீர்க்கும் நின்றருள்தெளிவே (தள்ளிவி) டாதெ
னைக்காக்குங்கிருபாநிதியே. (உ0கூ)

விந்தையதாயுமைப்பூசைசெய்தேனேமன்வந்தனுகாமுன்வ
ரந்தருவாய் வேதாந்தவிவேகா பரமாத்மசரித நாதாந்தவிலோபா
கா கனயோகா சே வேறியேவந்தெனையாதரி தாரியல்கின்றஜடாத
ரி வேட்புறமேவியகாரணனே (அடியனை) யாட்படவேயருள்கூ
ரனவே. (உக0)

115592

பாலனுரைத்தமொழிக்கிரங்கிச்சிவன்கோலவிடையினின்மே
லேறிப், பண்ணவர்புடைசூழக் கதிதாவென்றிரு மண்ணவரடிதா
ழத் தொண்டர்கள்வாழப் பணச்சர்ப்பந்தரித்துத்தம் பதத்திற்கி
ண்கிணிச்சத்தம்பயிலவே யபிராமியோடரனரும்வந்தார் (இனியு
ன்) செயலெனமலர்தூவியேமுனியார் பணிந்தார். (உகக)

காலனுக்கஞ்சியேசாலவணங்கிடுஞ்சீலனேகேளுமித்தாலமி
சை, கதிசேரருளுற்றாய் இன்றேடென்றும் பதினாறதுபெற்றாய்
பவமற்றாயென் கருத்திற்கின்புறச்சித்தந் திருத்திப்பண்புறப்பற்
றின் கழலிணைக்கன்பனென்றாகுவாய் (சண்டன்) வளமனைத்துங்
கெடவாழ்குவாய். (உகஉ)

திண்ணமிதேயுனதெண்ணம்விடுத்தெனைநண்ணியாராதனைப
ண்ணெனவே, செப்பியகன்றார் மார்க்கண்டனு மப்பரமன்றாள்
பணிந்துநின் றிங்கிதத்தொடு செங்கையுற்றிடு கொங்கலர்க்கொடு
கங்கைபற்றுறு மீசனேயென்றர்ச்சனைபுரிந்தார் (சிவ) பூசைசெய்
தின்புற்றினிதிருந்தார். (உகங)

அண்ணலெனுஞ்சிவன்றன்னடிபோற்றியிவ்வண்ணமிருந்தி
டப்புண்ணியனு, மந்தகனுருங் கொலுவினில் வந்திமையோருந்
துதிசெய அம்பெனுங்குணவம்பனும்பிறைக் கொம்பெனும்பனிர
ன்பனும்பல வானிரைகாதகர்சூழவே (வெற்றி) பூணெமதூதர்கள்
தாழவே. (உகச)

முத்தியருள்சுவர்க்கமதியபாதாலங் கணித்திடுஞ்சித்திரபுத்திரனார், முன்வந்துநிற்ப இன்னுட்கணக் கென்னென்றுரைப்பக் கருத்துடன் மூவலகுமாரெண்ணுந்திரு மேவுளரிறைபின்னும்பல முனிவர்தனக்கும்வயதுரைத்தநர் (வாறே) ரனைவர்களுக்குஞ் செயல் குறித்தார். (௨௧௫)

நத்துஞ்சராசரமான்பேதாதிக ளத்தனையுந்தொகுத்துரைசித்திரனே, நன்றானுக்குப் பணிசெய்மார்க் கண்டின்றனக்கு வயதினி நவிலென்றிடுமறலியினுரை செவிகொண்டபாவியேமே ளுட்டுக் கணக்க னருகிருந்தே (மெய்ப்பே) ரேட்டுக்கணக்கின் முறையறிந்தே. (௨௧௬)

கேளுந்தருமநெறிதவராதர சாளெமவள்ளலேநானதுதான், கீர்த்திமார்க்கண்டர்க்கின்றீரெட்டும் பூர்த்தியாய்ச்சென்ற தினிக் கால கிங்கரரொடு சங்கதிகூ றும்பரிவுட னங்கடையூர்க் கேகிச்சிவத்தைப்பணிந்திடுவான் (றனைவிரை) வாகப்பிடித்துக்கொணர்ந்திடவே. (௨௧௭)

வேளையிதென்றிடக்காலனுந்தூதரைச் சாலவழைத்துரைகேளீரோர், விசையினிற்சென்று மார்க்கண்டனை யசைவறக்கொண்டுவாரீரென வெற்றிச்சூலங்கதையுட னெற்றிப்பாலன்றனதுயிர் வீறுடன்கொள்ளவுந்தோன்றினர் (கடை) யூரினிற்றூதர்வந்தீண்டினர். (௨௧௮)

வாருங்களண்ணமாரேசிறுபாலனைப் பாருங்களண்டையிற்சேருங்களென், வார்த்தைதப்பாதீர் மணிச்சத்தங் கேட்குதுபாரீர் துள்ளாதிரு மாயாபெருவராயாவிழி தீயெரிபேயாமறை வல்லவன்றன்னைப்பிடித்திடுங்கள் (இனி) மெள்ளமெள்ளச்சென்றடுத்திடுங்கள். (௨௧௯)

காரண்டமெய்யாஈதென்னமணக்குதுபாரெந்தன்வாயினீருருதடா, கண்கெட்டமூடா பேசாதேநீ யென்கிட்டவாடா ஆலயமோடா கணகணவென்குதுமணியதோ மொணமொணவென்குதுதனியிதோ கற்பூரதீபவொளிதனிலே (ஓர்சுத) னைப்பாருந்தேவனருகினிலே. (௨௨௦)

ஆமடாசிங்கப்பற்றுமரையாயினித் தாமதமேனமதேமனுனைக், கட்டியொன்றுண்டோ நமக்கிவ னிட்டமென்றுண்டோ வுன்கைத்தெண்டா லடியடியுயிர் குடிகுடியதோ பிடிபிடியரை நொடிநொடியினில் அன்புடனேசற்றே பேசிடுவோம் (கிட்டித்) தெம்புடன்பாசத்தை.வீசிடுவோம். (௨௨௧)



நாமென்சீயத்திருகத்தூதரேமார்க்கண்டாவுனைத்தாமெமையர், னமனழைப்பித்தார் கொண்டேவிங் கெமையனுப்பித்தார் வாராயில்லெலி னத்திச்சுத்திதத்தியு ளத்திற்குத்திப்பற்றியே நாங்கள்கொண்டேகுவோம்பாரடா (கொடுந்) தீங்குசெய்யாமுனம்ந்திடா. (௨௨௨)

தானெரனும்தாண்டருக் காரொதிராகுமிப்பாரினிலே, அற்பன்னிருந்தாலு மெனைத்தொட வாற்றுமோமேனு முங்கட்கென்ன கோலமோஜக சாலமோவிது சீலமோகெடுகாலமோசிவன் கோவிப்பாரப்புறம்போங்களடா (படு) பாவிப்பிணங்களா நீங்களடா. (௨௨௩)

வீரியமாய்ப்பேசக்காரியமென்பதிறுவயதல்லால்வேறுமுண்டோ, வீண்மதமேதுக் கினியுந்த னுண்மைசெல்லாது கொண்டேகா துனை விடுவோமெனவெண்ணாதே யடைவாய்மொழிபன்னுதே வேலாலெறிந்துவனைந்திடுவோம் (கைத்) தெண்டாலேயுன் மார்பைப்பிளந்திடுவோம். (௨௨௪)

எதடாதூதரிப்போதுவந்தென்முன்னேவாதுகள்செய்குரீர் பாதகரோ, எனைத்தடுக்காதீர் சிவபூசை தனைக்கெடுக்காதீர் உயிர்கொடுக்காதீ ரெந்தனுரைகொண்டினிநீர் வந்தவழிசென்றிடுவீ ரென்றுரைக்கச்சினங்கொண்டிடுவார் (தூதர்) குன்றெனப்பக்கம்வந்தண்டிடுவார். (௨௨௫)

சாதகச்செந்தலைப்பூதனேகொள்ளிக்கண்டுதனேவாரீரிப்பேதையனைத், தாக்கிடுவோமே தெண்டுக்கிரை யாக்கிடுவோமே பிடிபிடியிவனைச் சதிருடனெற்றும்புறமங்கம் பதறிடவுறவிகலங்கச் சண்டன்முன்கொண்டுவிடுத்திடுவோம் (பொல்லா) வண்டனெனன்றின்றுபடித்திடுவோம். (௨௨௬)

ஐயின்மலர்ச்செழுங்காவினிலேபுட்பங்கொய்யுகிறான்சிறுபையலென்றே, யதட்டிச்செல்வாரும் சிரமசைத் துதட்டைமெல்வாரும் கொல்லென்பாரும் ஆலமெனக்கொதிசெங்கண ரோலமதிற்கடலென்குண ராக்கிரமித்துப்பெருந்துற்றனரே (தங்கள்) பராக்கிரமத்தைத் தெரிவித்தனரே. (௨௨௭)

வெய்யவன்மீதுபனியெதிர்த்தாலெனப்பொய்யிலநான்மறையையன்முன்னே, விந்தைகள்பலசெய்தார் கொடிதாகச்சில நிந்தைகள்சொலிவைதார் தம்மைக்கண்டவ் வேதியருங்கடைநாயினன்மீதுமதன்பருளாயென வேக்கமுமுற்றரனைத்துதித்தார் (தூதர்) சிவாக்கினிபற்றுறவுட்கொதித்தார். (௨௨௮)

கட்பெருவாயுளவப்பனேதென்ன செப்பவொண்ணாதநெருப்பெனவே, காயுவதேது உடலெங்குந் தீயுவதிது பொல்லாதுநங் காலனுமஞ்சுங்கெஞ்சுங்கோலமிஞ்சுஞ்செஞ்சொற் கற்பினையானைச்செயித்திடவே (நம்மா) லெப்படியாகும்பயிற்றிடுவீர் (௨௨௯)

ஒப்பறுமச்சிவனைத்தொழுமற்புதநற்பதியித்திறனைத்தொடாத தோடிப்பிள்ளைப்போ மல்லாலுயிர் வாங்கிடிழுப்போ மென்றேதூதர்க ளுடல்கரிந்துமடல்புரிந்த திடமுறிந்துகெடல்துறந்த கோரவேகத்தொடுமேகியே (எம) தீரசூரர்க்கெதிராகியே. (௧௩0)

பூவுலகிற்றர்ம்மதேவனெனப்புகண் மேவியதோரெக்கள்காவலனே, பொற்பின்மார்க்கண்ட னிடத்தினின் சொற்படிசென்றோமவன்செயும் பூசையினனல்பெருகினவரு செசெவினுடல் கருகினவொரு போதுமெம்மான்முடியாதிறையே (எங்கள்) மீதுசும்மாகுறையோதுறையே. (௨௩௧)

தாவிப்பிடிப்போமென்றுலச்சிவன்றனைச் சேவித்துநிற்கச்செந்தீபற்றியே, சாடுதென்செய்வோம் பதைபதைத் தோடியேங்குய்வோம் ஐயாவெங்கள் தாட்டிகமுங்கெடலாயிற்றே மீட்டுமதம்பதமேயின்றோஞ் சாமிதற்காத்திட வேணுமென்றே (தூதர்கள்) பூமியைப்பார்த்தரி காணநின்றார். (௨௩௨)

இவ்வகையாய்நின்றதூதர்சொற்காதினிற் செவ்வெனக்காய்ந்தநாராசமதா, விடித்தெனக்கைப்ப விழித்துக் கண் புடைத்தனற்கொப்ப வுள்ளங்கொதிப்ப இருபுயமுந்தத்துடித்து நெறுநெறெனப்பற்கடித்து என்னசொன்னீரென்முன்றூதரிப்போ (தும்மைச்) சின்னபின்னமாக்கவேதறிப்பேன். (௨௩௩)

ஒவ்வுமிதோசிவனாரடிபோற்றுமெய்விதமாயினக்கள்வனையு, முயிர்கொணராமல் யெந்தனிட் செயலுணராமல் வந்தென்முன்னே ஓவியமெனநின்றுரைத்த பாவியனிநற்றிறத்தை யோகோகோவையம் பழியாதோ (நீங்கள்) வர்காகச்செய்யுந் தொழிலீதோ. (௨௩௪)

நல்லதுநிங்கரமல்லர்களேயவன் சொல்லியவாறதுவின்றேமென்றார், நாதாவும்மாலு மாகாதென வோதினன்மேலும் அவன்றனால் நாங்கள்படுந்துயரமெத்த வாங்குநடந்தவநிமித்தம் நன்மையழிந்துயிர்தப்பரிதே (எம) தர்ம்மசிவன்றனருட்பெரிதே. ( )

வெல்லுவோமென்றுநீர்செல்லுவதிற்பய னில்லையெனத்தூதர்சொல்லவுமே, வெங்கைபோற்சீறி மகிடத்திற் பாங்குடனேறிசபதங்கூறி வெங்கணெடும்பகுவாயழல் பொங்கவனும்புகையாயெழ வேலொடுசூலங்கதையெடுத்து (மின்னும்) வாளடர்பாசங் கையிற்பிடித்து. (௨௩௬)



நீலமலைக்குச்சிகரமெனச்சுடர் காலுமணிமகுடந்துலங்க, திருதரோபோல ஏவற்றூதர்க ளருகினிற்சூழக் கருங்கடா வின்மேலையென்னவாற்றலினோடினர்பண்ணவரிற்சிலர் நின்றலைபட்டுள மேங்கவே (வெஞ்சின) மண்டலினெட்டுயிர்ப் போங்கவே (௨௩௭)

தாலமதிர்ந்திடக்காலன்வரும்பொழு தோலமிட்டுச்சிறுபாலகனுந், தயங்கிமெய்வேர்த்து இருகண்ணும் பயங்கொளப்பார்த்துக் கடையூர்வாழ் தற்பரசிற்சொருபாவினி யெப்படியுய்த்திடுவேனா னதருட்டிறத்தினுக்கழகிதாமோ (என்னை) மிரட்டுவித்திடிற்பலனேதாமோ. (௨௩௮)

பார்க்கப்பயமாகுதென்செய்குவேனடியார்க்கிரங்குங்கடையூர்க்கரசே, பருவதமிதுவென்னுங் கிடாவினிற் கருமலையெனவுன்னுஞ் சண்டனென்னைப் பற்றியிழுக்கவெனப்பாசத்தையசைத்தொருகைப்பாற் பருத்தகதையெடுத் தோடிவாரா(னிதோ)உரத்தபெருங்கூச்சற் போடுகிறான். (௨௩௯)

காக்கக்கடனுமக்கேயும்பர்க்காயன்று பார்க்கடலுற்றநஞ்சேர்க்கையுடன், கண்டத்தில்வைத்தாய் வல்லசிறுத் தொண்டர்க்குறித்தாய்ப் பரமெனக் காய்கறியுண்ணவிகழ்ந்தொரு சேய்கறியுண்ணவுவந்துயர் காட்சிகொடுத்தருளானாதா (எம) னாட்சிகெடுத்திட வொண்ணாதா. (௨௪0)

வேழமுறித்துணும்வேழமுரித்தொருவேலையெரித்தவேள்குரவா, வேதனுமாலும் மறியவொண்ணாதநின்காலின் பணிகொண்ட வெனதங்கமுமன்பாருயிர் தனையுண்கவுமொண்கூரிய வெண்பற்கடித்தெமன் வாரானே (இனி) தன்பர்க்கருள்கடையூரானே.

வாழிநின்பொன்னடிக்கா[illegible]னையிப்பாழியமனிடர்க்காளாகா, வாறருளையா திருக்கடையூரானேயா தேவர்சகாயா வாராய்வாராய் பவவினை தீராய்தீராய் புவிதனில் வந்தன்புடனெந்தன்கலிதீர்க்கவே (எம) பந்தங்கெடமுந்துங்கதிசேர்க்கவே (௨௪௨)

ஏதினிமேலெனக்காதரவாருமைமாதொடுஞ்சீதகங்காதரனே, யென்றிதுசொல்ல வமுர்தலிங் கன்றனதுள்ளங் கசிந்தெழுந் தெதிர்நின்றுயிர் கவருஞ்சமனெதிர்நின்றுவா பகருஞ்சுதனேயஞ்சவேண்டாமெனவுரைத்தார் (நகைத்) தேயஞ்சவேண்டார்புரமெரித்தார். (௨௪௨)

ஓதியவெல்லையின்மீதுவகைக்கடல்போதக்குளித்தெனவேதியரும், உள்ளந்தெளிந்தார் சினத்தெமவள்ளலும்வந்தாரடாபாலா வுனையழைக்கவந்தோதுறு மெனதெழிற்கொளுந்தூதரையோட்டிவிடத்தகுமோ சொல்லடா (தெண்டான்) மாட்டியிழுத்தேகுவே னில்லடா. (௨௪௪)

அவ்வுனக்கீசனளித்தவயதிவேட்டின் றேுடுஞ்சென்றதுசண்டிலேயோ, அரனடிதொழுதாலும் கண்ணீர்ததும்பு. விரைவுடனழுதாலும் நீடேனுன்னை யுஞ்சப்பற் கெஞ்சத்துயர் மிஞ்சசர்ப்பஞ்சுற்றிய வல்லமையிற்றனியே விடுத்திடுவேன் (இரத்தம்) சொரியக் கதையா லடித்திடுவேன். (௨௪௫)

என்றெதிர்நின்றுபுகன்றிடுமேமனைக் கண்டுமார்க்கண்டனும் நன்றறிவேன், ஏதுகாண்சும்மா பிதற்றத் தகாது நமனும்மாற் றுயர்பட வெகுபெற்றிடுகட்பரமற் குறிமைப்படுனற்பெருமைக் கேச்சலவோதொண்டர்மேற்செலவே (துணி) வாக்கலோவாயிது பேச்சலவே. (௨௪௬)

(வேறு)

வாரணந்தன்னையுரித்துடல்போர்த்திய காரணனிடஞ்சாருமெனை, வாவென்றழைக்கவுமாமோ தர்ம்ம தேவென்றுனைச்சொல்லர்மோ உந்தன்மதமோ அப ஹிதமோ கெடுவிதமோ விதுசதமோ யிவ் வாதுபுரிந்தா யமூர்த்தீசன் (இந்தச்) செதியறிந்தால்வெகுமோசம். (௨௪௭)

ஆரடாயின்னமொருதரஞ்சொன்னசொற் கூறடாவென்பலம்பாரடாவுன், ஞணவங்கண்டறிவேனே விண்ணிற் பூணவுங்கொண்டெறிவேனே இந்த அகிலத்துயிர் சகலத்தையு மகலச்செயு மிகைபெற்றுள வந்தகனென்றெனைக்காணுயா (பொல்லா) நிந்தனை செய்யவுந் தோணுயா. (௨௪௮)

அந்தகனீயெனில்வந்தவழிதெரி யாதோவுனக்கிந்தவாதினியே, எப்புறம்போவாயே இங்கேநின்றால் செப்பங்கெடுவாயே சினத்துட னங்கம்படபடெனப்புவி யெங்குங்கிடுகிடெனக்குதித்தாலென்னவுந்தனுக்கஞ்சுவேனோ (பகைத்) தாலுன்னைவங்கினிக் கெஞ்சுவேனோ. (௨௪௯)

முந்தவுனக்கான்றந்தவயது முடிந்ததென்றுலினிச்சொந்தமுண்டோ, இந்த மூடத்தனமேண்டா என்கைத்தெண்டாற் சாடத்துணிவேண்டா மார்க்கண்டாநீ முறைப்பட்டலரக்குருதிக டெறிபட்டுலரச்சிரமிதை மூளைசிதறவடித்திடுவேன் (எருமைக்) காலிற் பதறக்கொடுத்திடுவேன். (௨௫௦)

காலிற்கொடுக்கவுஞ்சூலத்திடிக்கவுஞ் சாலப்பதைக்கவும்ஞாலத்திலுன், கனமுஞ்சினமும்பழிக்கச் சிவபத்தர் மனமுங்குணமுந்தழைக்க வெழுந்தருள் காரணக்கடவுளர்பரி பூரணத்திடமுளவெனைக் கட்டுவேனென்றுநீதுள்ளாதே (யுந்தன்) அட்டத்தனமிங்கேசெல்லாதே. (௨௫௧)



ஆலித்தெழும்பத்மாசூரனுக்குவரம் பாலித்தோளிந்திடுஞ்சூலத்தனு, லாதரிக்கப்படுவாயோ என்முன் வாதிட்டுவெற்றிகொள்வாயோ அடடா அறிவறுசிறுவனேகொஞ்சமும் பொருபொருவிஷாஷிலின்மிஞ்சும் அக்கினிக்கம்பத்திற்றூக்குகிறேன் (உன்னைச்) செக்கினிற்போட்டுயிர்மாய்க்குகிறேன். (௨௫௨)

மாய்ப்பதுந்தீய்ப்பதுமெய்ப்பதும்போய்ப்பல வாய்ப்பதுனக்கடாபேய்ப்பயலே, வாயைமூடிச்செல்லுமேமா சூட்பிர தாயம்நீடிச்சொல்லலாமா சும்மா வரிசைகெட்டிடாதேயுங்களரசுவிட்டிடாயிந்த மட்டிலுஞ்செல்மரியாதையே (என்னைக்) கிட்டிவரிற்பெரும்வாதையே. (௨௫௩)

பேயனெனச்சொல்லும்வாயைக்கிழித்துனைக் காயும்நரகினிலேயிடுவேன், பித்தன்பலமிருக்தாலு முன்னைப் பற்றிவிடேனொருக்காலும் அடா பேதைப்பய லேதுக்கெதிர் வாதிட்டுரை சாதிக்கிறாய் பேசாமல்வாவுன்னைக் கிட்டுகிறேன் (இதோ) கூசாமற்பாசத்திற் கட்டுகிறேன். (௨௫௪)

சட்டவும்வெட்டவுங்கிட்டவுந்தெட்டிலா மட்டியுன்னிட்டமோகெட்டாய்போ, காசினிமீதமூர்த்திசன் திருத் தாசருக்கேதுநின் பாசம் வீணாய்க் கத்தாதே பினத்தாதே நீ சுத்தாதே வருத்தாதே காலமுடிந்ததோடா யேமா (உந்தன்) சீலமழிந்துகெட லாமா. ()

கெட்டுப்போவாயென்றதுட்டப்பயலுனைக் கட்டியிழுத்தெமபட்டணத்துக், கேகுவேன்பாரு மிப்போதேயுமை பாகன்மன்வாறு தப்பாதேபல்லைக் கெஞ்சுற்றிட நாய்நரிகளு குஞ்சுற்றிடநோய்தருமுளிற் கிட்டியருங்கழு விட்டிடுவேன் (ஒரு) பெட்டிகருந்தேழைக் கொட்டிடுவேன். (௨௫௬)

தோணுதபுத்தியால்வீணாய்ப்பிதற்றுறாய் சேணுடர்கோனுரங்காணுயோ, தொட்டமலர்க்கணைவேளே யன லிட்டெரித்தாரோ கண்ணாலே பத்திரு தோளும்வாளும்பெற்றான் நாளும்வாழுமக்கிரி தூக்குவேனென்றிடும்ராவணனார் (பலம்) போக்கியகுன்றவிண்மாவலனார். (௨௫௭)

நாணமல்வேடனெச்சிற்குதைபட்டிடு காணுடுபேயுடன்றூணுடி, நாடோறும் பிச்சைகொள்வானோ கதிவீடுறரட்சைசெய்வானோ உந்த னலமுங்குலமும்மாணவ பலமுஞ்சலமுங்காணுவேனயமும்பயமுமொன்றறியாதவனே (என்கண்) ணியமுஞ்செயமுங்கண்டறிமாதவனே. (௨௫௮)

தாசர்கள்போற்றுஞ்சர்வேசனைத்தூஷணையாசொலியேசுரு
ய்தோசியுன், கட்டிகமென்றும்மில்லாதே பாசம் பூட்டுவேனென்
றுதுள்ளாதே யுந்தன் றலைதத்திவிழத்தவவரு ணிலைவெற்றிகொ
ளச்சிவனொரு தாளினுதைத்திடவீழ்வாயே (வெரும்) பாழிலெதிர்
த்துயிர்மாழ்வாயே. (௨௫௯)

மீசுரமாகவேம் பசுகிருயடா பூசுராநீப்ணியீசுரனோர், மீதினும்
பாசத்தைச்சேர்ப்பேன் உந்தன் போதனையுஞ்சற்றேடார்ப்பேன்
என்னை மீறிப்பிரிந்தனை போரிட்டறியாரத்தனை மேவுந்திறத்
தைத்தெரிவேனென்றான் (சிவனரு) ளியாவுங்குவித்துச்சிறுவனி
ன்றான். (௨௬௦)

என்னசெய்வேன் சுடர்க்கண்ணுதலுன்னையுமென்னையுங்கட்ட
வென்றென்னுகிறு, னெம்பெருமானுனக்குபயம் என தம்பெருமா
கவிர்க்குபயம் ஜெக நிசாசுரர் நேசாபிர காசாசரு வேசாயில் வே
ளையிற்றப்பிப்பதுன்பாரம் (அல்லாறம்) காலனுக்கொப்பிப்பதென்
றீறம். (௨௬௧)

சின்னஞ்சிறுவனென்றென்னையிரட்டவு முன்னெஞ்சுதான்
கருங்கன்னெஞ்சமோ, சித்தமிரங்காயா திருவருட் பற்றவிரும்பா
பாயா தூயாமிக்குயர் திரிபுவனத்தொருவனே செய வரைமகணத்
திறைவனே பயந் தீர்த்தெனைக்காக்கவிறைப்ந்தானே (பொல்லாக்)
கூற்றனைப்பார்க்கப்பயந்தேனே. (௨௬௨)

தாயுந்தகப்பனுநீயலாலிங்கெனைச்சேயென்றெடுப்பவரோயி
லையே, தருணமிதுவேதமியனையாளா யன்பின் கருணையபிராமியி
ன்மணவாளா கானிற் சருவியமயின்முருகனினுயர் கரிமுகன்வல
ம்வருகவேகனி தந்துவக்கும்பொருளாவாயே (என்முன்) வந்தரு
ட்கண்டிறமீவாயே. (௨௬௩)

ஆயும்பலமலர்தேடிக்கொணர்ந்துநின்றூயபதம்பணிநாயின
ன்முன், னதட்டிக்கிடாவினிலேறிச் சண்டன் பதட்டத்துடன்சி
னமீறிப் பக்கத் தடுத்துக்கதை யெடுத்துச்சமர் தொடுத்துச்சிறை
பிடித்துக்கொளி லியானுன்னைவிட்டுப்பிறிவேனோ (பாவி) தானு
ன்னைக்கட்டற்கறிவானோ. (௨௬௪)

தோகைமயிலுமைபாகனேமான்மழுவாகனேயென்றருகாகவு
மே, தோத்திரஞ்செய்திடும்பாலன் றனைப் பார்த்தரனெய்திடுங்கா
லன் றன்றூற் றுயர்பெற்றிடவுயர்வற்றதும் வெயர்வுற்றிட லயர்
வுற்றதும் தொல்லைவினைப்பயனீதாகும் (எமன்) கொல்லநினைப்ப
திலேதாகும். (௨௬௫)



வேகமுடன்பிடித்தேகுவேனென்னுமுச்சாரநமன்பதிக்கே
காமல், மெய்த்தருள்வேனொநற்காட்சி இதர்க கந்திமுகவனைசா
ட்சிபலா வெம்பாதேநீ தெம்பர்யென்மு கம்பாரினி வம்பாமெம
ன் வீழவுன்றத்தினைக்காப்பேனென்றார் (பொல்லாக்) காலனிதை
ச்செவிகேட்பதின்றான். (௨௬௬)

அஞ்சலிலாவெண்டிசைக்குறியோரினின்மிஞ்சியவுத்தரகிட்டி
சையோ, ருகிய விச்சிவன்றானோ யெந்தன் றேமொழித்திடுவா
னோ இதையறிகுவேனுனென்றயிரைந்து விறகினிரிந்துறந்து ஆ
விளெய்யெய்துமங்கியேபோல் (அருங்) காவினிலெய்திடும்வெங்
கயம்போல். (௨௬௭)

கொஞ்சம்பொறுத்திடென்றின்சொலுரைத்திடும் நஞ்சணிக
ண்டருமஞ்சிடவே, கோபித்தகண்ணனல்சிதற வாம பாகத்திற்பெ
ண்ணுடல்பதறத் தேவர்கள் குறையென்றிருகரமேந்திடச் சிறுவ
ன்றிருவடிசாய்ந்திடக் கூற்றனும்பாசத்தைவீசினனே (அரனைப்)
பார்த்தகங்காரத்தாலேசினனே. (௨௬௮)

நீதமிலாதரன்மீதினும்பாசத்தைப் போதவிடுத்திடுங்காதகன்
மேல், சித்தன்கடுஞ்சினமாகிச் சிவலிங் கத்தினினுற்பவமாகி யெ
ண்டிசை நீருங்கிரிதாழுங்கடலேழும்பணிவேழுங்சரும் நின்றநிலை
தவறுற்றிடவே (நிறைநிறை)யண்டச்சுவர்களுமிற்றிடவே (௨௬௯)

தாதவிழ்கொன்றையஞ்செஞ்சடையோனுமப் போதெழுந்
தேதடாபாதகனே சற்றுமஞ்சாதடுத்தாயே சிவ பத்தர்க்கிடர்வி
ளைத்தாயே எந்தன் றன்னொருபாகத்துளசிறு பெண்ணுடனோகப்
புரிகயர் தாக்கவும்நீதியிதுவாமா (உந்தன்) ஊக்கமும்போயொழி
வாயேமா. (௨௭௦)

தானந்தவமுணர்ந்தீனமிலாச்சிவ ஞானபரம்பரையானவரை
த், தண்டிப்பேனென்றொருக்காலே உந்தன் துண்டரீகத்தனத்தா
லே என்னைச் சற்றெனுமறியாமற்சிவ பத்தரையறியாமற்செயுந்
தப்பிதமேதெனவேக்கித்தார் (ஈசன்) பொற்பதத்தான்முடிமேலு
தைத்தார். (௨௭௧)

ஆணவமாமெமனணவுதைத்துடல் தானடுங்கக்கரம்பூனொ
ளிர்சூ, லத்திற்குத்திப்பிளந்தாரோ சிவன் சித்தமெத்தக்குளிர்ந்தா
ரோ வானோ ரனைவருமேவிப்புதிதியல் பனிமலர்தூவித்துதிசெய
வன்புணிறைந்தருளேக்கினார் (மார்க்கண்)டன்றுயரந்தனைப்போ
க்கினார். (௨௭௨)

மாலவன்றேடறுங்காலுதைபட்டரி பாலனொழிந்திடத்தால மிசை, வாழ்சீவராசிகள்செழிக்கச் சொடுங் கோல்பாவதோசிகள் தழைக்க பிர்ம்மன் வருமையுற்றனேகோவிளி யுருவமைத்தலா காதென மாரன்றனைத்தொழவர்கினான் (பூமின்) பாரஞ்சுமக்கில ளாகினாள். (௨௭௩)

சீலமிலாதென்னகாலமிதோயிந்த ஞாலந்தனிற்றிரள்சாலவுயிர், சிதைவிலதானவாறேது யானு மிதையறியேனெனமாது தன் றிருவுளம்வாடிப்பண்டர வுரமிசைநீடிக்கண்டுயில் சீதரனற்பதம்போற்றியென்றாள் (புவி) மீதுறுமிப்பொறையாற்றேனென்றாள். ()

எண்ணில்பிறப்பினுயிரழியாதெனின் மண்ணின்பொறையொருகன்னிகையா, னெப்படித்தான்பொறுப்பேனோ பாவி தப்பிதமென்னசெய்தேனோ எந்த னிருதோள்களுமிகநோகுதே சிறுதாள்களுமயர்வாகுதே என்னசெய்வேனெனவார்க்கலுற்றாள் (திருக்) கண்ணபிரான்செவிகேட்கலுற்றார். (௨௭௫)

விண்ணியல்கார்முகில்வண்ணனெழுந்துயர் பண்ணவர்கைதொழுக்கின்னெனவே, மேதினிமாதுமுன்வந்தார் துய ரேதினியோதெனவுந்தாரணி மெத்தப்பொறையுற்றும்பல வற்றிற்கழிவற்றுற்றலின் மெய்சலித்தேனெனவுங்கனிந்தாள் (சா) னெய்தனுற்றேனெனவும்பணிந்தாள். (௨௭௬)

உண்மையிதாமடிபெண்மயிலேயரன் றன்மையறிந்தினிநன்மைசெய்தே, யுலகத்தையும்பரிவேனே வந்த கலகத்தையுந்தெரிவேனே என்ன வேதிப்பன்னகவயிரியின் மீதுற்றின்னகமகிழ்வுட னும்பர்கோன்வாழ்கடையூருறைந்தார் (மாய) னெம்பிரான்றாள்பணிந்தீதறைந்தார். (௨௭௭)

விண்மிசையோர்தொழுந்தண்மையுளீரிந்த மண்மிசையேயொருயிருண்ணிசைவான், வீரமிழந்திடுவானேன் புவி பாரமிகுந்திடுவானேன் இத்தை வெளியிட்டருளாயென்றன னழல்விட்டகலாவொண்கணன் மெய்யிதுநீவசொலக்கேளுமென்றார் (செழும்) வையகமுண்டநன்மாலுமின்றா (௨௭௮)

வண்டியலுந்திருத்தண்டுழாய்மார்பனேதொண்டுசெய்மாமிருகண்டரிட, மைந்தனுக்குப்பதினாறுண் டெனத்தந்தனுப்பிக்கடையூரா மெந்தன் மலரடிபூசிப்பார்கதி யுளரொனநேசிப்பானெனை வந்தடைந்தான்மலர் கொண்டுவந்தான் (மிகச்) சிந்தைநொந்தான்கழல் கண்டுவந்தான். (௨௭௯)



தண்டனைசெய்திடுஞ்சண்டனுக்குப்பயங்கொண்டெனையன்று மார்க்கண்டனுக்குத், தாட்சியிலவாமீய்ந்தேன் , அன்பர் மாட்சிமையாலிங்கேவாய்ந்தேன் எமன் றன்னிகரிலையென்னும்பழவென்னடியவர்முன்னும்சில சர்ப்பனைசெய்திழிகூறினன்காண் (யென்னை) யற்பமதாயெண்ணிச்சீறினன்காண். (௨௮௦)

எள்ளளவேனுமதிப்பிலனாய்ச்சிறுபிள்ளைமார்க்கண்டனைக்கொல்லுவேனென், றெட்டியேகையினிற்றெண்டுங் கதிர் விட்டிடுஞ்சூலமுங்கொண்டு பாவி எனதொருபாகத்தம்பிகை மனமிகநோக்கக்கையு மேங்கவேபாசமுஞ்சேர்ப்பநன்றோ (இந்தத்) தீங்குசெய்வானையுங்காப்பதுண்டோ. (௨௮௧)

துள்ளுமெருமையின்வள்ளலேவீழ்த்திடியே சன்னைதவிர்த்தனனுள்ளதென்றார், அவ்வத்தண்டாரணிமாயன் தொண்டருளமெய்த்தன்பானசகாயன் றன்னைத் துதிசெய்தவனிமடந்தையுமதிதுன்பமதையடைந்தனள் தூய்மையனேசினமாற்றிடுவீர் (இப்போ) தேமனுயிர்பெறக்காத்திடுவீர். (௨௮௨)

என்றிவைகூறுமரன்றிருத்தாதையை யுந்திரளாய்ந்திராண்டரையு, மீசன்பரிந்துரைப்பாரோ கேளீர் யோசனைவாய்ந்திருப்பிரோ இந்த யெமனுக்குயிர் தாமளித்திட லாமெனிற்சில கேமுர்க்கிவனெப்பொழுதுந்துயர் செய்திடுவான் (தவ) சிற்பெரியோர்முன்னுமெய்திடுவான். (௨௮௩)

குன்றனையானுயிர்சென்றதேநன்றுநந் தொண்டரொலாந்துயரின்றியுய்வார், கூற்றனென்பேருமாகாதே பவந் தோற்றியபாரினின்மீதே என்னக் குற்றமற்றிடும்நற்றவர்க்கருளுற்றவெட்டுடனெட்டினிற்சமன் கொள்ளவரிற்பெருங்குற்றமுண்டோ (ஆவி) தள்ளவுதைத்திடின்மெத்தநன்றே. (௨௮௪)

நீரணிசெஞ்சடையாயுரையாயெனத் தாரியல்தேவர்கள்கூறிடலும், நீயிதாமவையீரோ வந்த சேதிதனையறியீரோ தனியானெங்கெங்குளானோவத்தல மெங்கெங்கனுமேவுற்றறிவினிங்குவந்தானெனையும்பணிந்தான் (மன) துங்கனைக்கான்முனிபுங்கவன்றான். ()

தாரணிமீதுயாங்கூறியதோர்பதினாறுமுடிந்தெனச்சீறிவருஞ், சண்டனுக்கஞ்சியென்னோராம் பாலர்க்கென்றென்றைக்கும்பதினாறும் வரந் தந்ததையறியானோயிவன் வந்ததுகுறியானோசமன் றானெனுமாணவங்கண்டீரோ (இந்த) வீணனைக்காத்தருளென்றீரோ. ()

மன்னியபொன்னகர்ப்பண்ணவரோயெனச் சொன்னதோரீசன்றன்பொன்னடிமேல் மற்றும்பணிந்தினிதாரோ யுந்தன் சித்தமறிந்திடுவாரோ இனி மறலிசெயுறுபழியோரா தூகரசிவவருள்பாராய் மண்டலமெங்குந்துதித்திடவே (திருச்) சண்டனெழுந்தன்புநித்திடவே. (உஅஎ)

என்னவிளம்பியபுண்ணியரோடரன் பின்னுமொருமொழிபன்னுவரோ, எந்தன்பதம்பணிவோரும் எனைச் சிந்தைதனிநினைவாரும் அவரினிதடிமைகளறவோர்களு நினைவுடனறமிகுவோர்களு மித்தகையார்முனமெய்திடினும் (அவர்தஞ்) சித்தமொவ்வா வகைசெய்திடினும். (உஅஅ)

ஆங்கதுகாணின்மனம்பொறுக்கேனெனத்தீங்கிதுசெய்யுமப்பாங்கவனும், மாக்கினைக்குட்படுவானே நின்திரு வாக்கினுக்கொப்பிடுவானே யைய அந்தகனுயிர்வந்திடவருள் தந்திடினுலகந்தனிலுண்மை யாவரும்போற்றுமெனமொழிந்தார் (சிவன்) கோபமுமாற்றி மனங்குளிர்ந்தார். (உஅகூ)

ஓங்குந்திருவருளுக்கம்வைத்தேமனைப் பாங்குடனேவரவீங்கெண்ணு, யோகியானினிதழைத்தார் புவி மீதிலெமனுயிர்தழைத்தான் தங்குறை யோசித்தரனேசத்தையு மாசித்தடிபூசித்தனனுமையொருபாகாயோகா நின்சரணம் (மூழுமா) னுமைவுறுவாகா யேகா நின்சரணம். (உகூ0)

சிற்றுணர்வேன்செயுங்குற்றம்பொறுத்தருளத்தனேயென்னவுரைத்திடவே சிற்பரனன்றினிக்காலா எந்தன் சொற்படியொன்றுநீகேளா யென்னைச் சிந்தையினினை தொண்டரையிடர் தந்திடுமொரு கண்டனைவிடுத் திங்கிதமாகவேவாழவென்றார் (என்றும்) பங்கமிலாதரசாளவென்றார். (உகூக)

வெற்றிமிகுஞ்சமனத்தகையீசனுரைத்திடும்நல்விடைபெற்றவன்றன், விந்தையுளபதிக்கேகத் தேவர்கள் சிந்தைமகிழ்ந்துடனுகச் சென்றுயர் வேதவிதிப்படிமந்திர மோதியறப்பதியென்றவர் மின்னுமகுடமுஞ் சூட்டியே (கால) னென்னும்புகணிலை நாட்டியே. (உகூஉ)

மூத்தலத்தார்நலங்குற்றமறிந்திடுங் கர்த்தனுமென்னவாழ்த்தித்தமதூர், முனிவருந்தேவருஞ்சென்றார் காலன் றனியிருந்தேயறைகின்றான் கேளீர்மெய்ம்புளதூதுவரோசிறி தன்பிலபாதகரோ சிவன் மூதடியார்முனஞ்செல்லாதீ (ரவ) ரோதுவதிர்க்கெதிர்சொல்லாதீர். (உகூங)



பத்தியுடனுங்கட்குற்றதொழில்தனை நித்தஞ்செய்வீரென்றுரைத்தெமனும், பண்புடனேயரசாளத் தம தன்பர்களெங்கெங்கெங்கும்வாழக் கிருபை பாலித்தனுகூலத்துடன் ஞாலத்தினின்மேலுற்றிடு பரமனுமிக்கமகிழ்வாகச் (செழுந்) தரைமினின்றுக்கம் நிகழ்போக. (உகூச)

தெம்புடன்மார்க்கண்டனும்பரிவாகநின் றம்பதம்போற்றவுமெம்பெருமான், செல்வனைப்பார்த்தரும்பாலா கொடும் வல்வினை தீர்த்திடுஞ்சீலா நின்மேற் சிந்தைமகிழ்ந்தேனென்முன்றினி லெந்தவரம்பெறவென்றனர் சிக்கென்றெழுந்து பணிந்துரைப்பான் (பவத்) துக்கமெனுங்கடலின்றிநிற்பான். (உகூரு)

அன்புடன்பெற்றுவளர்த்தியவன்னையர்க் கும்பிதாவானவர்க்கும்பதவி, யளித்திடவேணுமிப்போதே அறந் தழைத்திடும்பாரினின்மீதே நன்னீ ராடிக்கதிதேடிப்புகழுடிக்கொண்டாடுற்றவர்க் கானபதவியளிப்பீரென்று (பெருண்மெஞ்) ஞானபரனங்களிப்பேனென்றார். (உகூசு)

மைந்தன்வலப்புறம்நின்றுபுகழ்ந்திட மாமிருகண்டருஞ்சேயுமாய், வந்தடிபோற்றிக்கொண்டாட யாழொடு கந்தருவர்சைபாடச் சிவனரை மதிநுதலுமையவளோடுய ரதிதவவிரதியர்நாடிய மாண்புளகயிலைமலைக்கெழுந்தார் (தேவர்கள்) வான்பொழிபுயலென்னலர்ப்பொழிந்தார். (உகூஎ)

சுந்தரஞ்சேர்வெள்ளியங்கிரிமேவி நிரந்தரமானபரஞ்சுடரை, சொல்லொணுவின்பசாகரத்தை மனவிருட் கெல்லெனுமன்பராதரத்தை வல்ல சுருதியின்முதன்முடிவைத்துணை கருதியேயடிமுடிவைத்தலர் தூவிநிதங்களிப்புற்றிருந்தார் (சிரஞ்) சீவிபதந்தனைப் பெற்றிருந்தார். (உகூஅ)

காதகனுமெமன்மீதெதிர்த்தன்னவன் வாதையொழித்திடுந்நீதில்மார்க், கண்டன்றனைமதிப்போரும் அலர் கொண்டுதினந்துதிப்போரும் அவரின் காதைதனைச்சொலுவோரிரு காதுதனிற்கொளுவோருங் கற்பகநாட்டினையாண்டிடுவார் (சிவன்) அற்புதத்தாட்டுணைபூண்டிடுவார். (உகூகூ)

மாதமும்மாரிவளங்கிடக்கற்புள கோதையரன்பர்மனந்தழைக்க, மாவுல்கிற்புகழ்தேங்க அப்பு நாவலனற்றமிழோங்கத் திரு மாலயனரனுமைதிருவிசை யாளயில்தனிபழுகனிவர் மங்களமாயென்றும்வாழியே (இரவி) திங்களுமானீடூழியே. (ரு00)

### வாழ்த்து ஆசிரியவிருத்தம்.

மாமருவுசப்தபுரிதன்னின்வளர்செல்வனிறை
    மாண்புளோர்மெச்சுமுஜிதன்
மன்னுதமிழ்வாணருக்குபகாரிவிஸ்வகுல
    மரபினுக்கொருநாயகம்
பூமருவுமக்கடஞ்சிந்தைகிசைந்தபடி
    பொன்பூத்திடுங்கற்பகம்
புகலுமெஞ்ஞானநூலாய்ந்திடும்விவேகநற்
    புனிதன்லட்சுமணனீன்றருள்
தேமருவுமலர்மார்பனிராமசாமிக்குரிசி
    திரவியசகாயஞ்செயச்
சித்தம்வைத்துக்கிரையம்பதியின்மேவுகலை
    திகழப்புநாவலன்சீர்
காமருவுபாரதியுரைத்தகும்மித்தமிழின்
    ஞானிலமெலாம்பரவவே
தன்மைபெறுசென்னையச்சிட்டளித்தானென்றும்
    நற்புகழ்படைத்தானரோ.

மார்க்கண்டேயர்

## சங்கீதசார வொயிற்கும்மி

முற்றிற்று.

115592

